SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:4, Pages:56
NOVEMBER-2023, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

நவம்பர் 2023,
விலை ரூ.20/-





திருமலையப்ப ஸ்வாமி
புஷ்பயாக மஹோத்ஸவம்
19-11-2023



*ந சைதத்$_3$வித்$_3$ம: கதரந்நோ க$_3$ரீயோ*
*யத்$_3$வா ஜயேம யதி$_3$ வா நோ ஜயேயு: ।*
*யாநேவ ஹத்வா ந ஜிஜீவிஷாமஸ்*
*தேடவஸ்தி$_2$தா: ப்ரமுகே$_2$ த$_4$ார்தராஷ்ட்ரா: ॥*

போரிடுவதா, வேண்டாமா என்ற இவ்விரண்டில் நமக்கு எது சிறந்தது? அல்லது நாம் அவர்களை வெற்றி கொள்வோமா? அல்லது நம்மை அவர்கள் வென்றுவிடுவார்களா? இதையும் அறியோம். எவர்களைக் கொன்று நாம் வாழக்கூட விரும்பவில்லையோ, நம்மவர்களான அந்தத் திருதராஷ்டிர குமாரர்களே நம் முன்னே நம்மை எதிர்த்து நிற்கிறார்கள்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–6*

*ஸ்தோதவ்யத்வம் திசதி பவதீ தேஹிபி: ஸ்தூயமாநா*
*தாமேவ த்வாமநிதர கதி: ஸ்தோது மாசம்ஸமாந: ।*
*ஸித்தாரம்ப: ஸகல புவந ச்லாகநீயோ பவேயம்*
*ஸேவாபேக்ஷா தவ சரணயோ: ச்ரேயஸேகஸ்ய ந ஸ்யாத் ॥*



நீ பிராணிகளால் துதிக்கப்படுமவளாய் பிறரால் போற்றப்படும் தன்மையை அவர்களுக்கும் கொடுக்கின்றாய். அத்தகைய உன்னையே வேறு புகலற்ற அடியேன் துதிப்பதற்கு விரும்புமவனாய், என் முயற்சி பலிப்பவனாய் உலகம் முழுதும் புகழ்தற்கு உரியனாக ஆவேன். உன் திருவடிகளில் தொண்டு செய்ய விரும்புதல் எவனுக்கு நன்மையின் பொருட்டு ஆகாது?

*- ஸ்ரீஸ்துதி 3*



# திருச்சானூர்

## ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்

### 2023, நவம்பர் 10 முதல் 18 வரை

**10-11-2023**
வெள்ளிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : சிறிய சேஷ வாகனம்

**11-11-2023**
சனிக்கிழமை
பகல் : பெரிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**12-11-2023**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**13-11-2023**
திங்கட் கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

**14-11-2023**
செவ்வாய்க்கிழமை
பகல் : பல்லக்கு உற்சவம்,
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**15-11-2023**
புதன் கிழமை
பகல் : சர்வபூபால வாகனம்
தங்கத்திருத்தேர்
இரவு : கருட வாகனம்

**16-11-2023**
வியாழக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**17-11-2023**
வெள்ளிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**18-11-2023**
சனிக்கிழமை
பகல் : சக்கர ஸ்நானம்
பஞ்சமி தீர்த்தம்
இரவு : துவஜாவரோஹணம்

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



# ஸப்தகிரி

சமய மாத இதழ்


நவம்பர் 2023

மலர் 03 இதழ் 04


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம் | |
| கார்த்திகைப் பெருவிழா காணும் அலர்மேல் மங்கைத் தாயாரின் அற்புத வைபவங்கள் -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 07 |
| மலைநாட்டு மஹாலக்ஷ்மியின் மஹிமை -திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா. | 12 |
| ஜோதிட சாஸ்திரம் : வேத ஜோதிடத்தில் 12 வீடுகள் - முனைவர். ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி, சென்னை. | 16 |
| தீபாவளி அன்றும் இன்றும் -திரு. ஹரிசங்கர், கும்பகோணம். | 18 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: கண்ணனை நேசித்த ஸ்ரீருக்மிணிப் பிராட்டியார் - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 21 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 23 |
| மங்கை-மணாளன் சேவையில் மலர்கள் - திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி. | 26 |
| திருச்சானூர் அடைநெஞ்சே! - திரு. எஸ்.சுதர்சனம், நங்கைநல்லூர். | 31 |
| 108 திவ்யதேச வைபவம் : திருப்பாடகம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 35 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : திருவரங்கப்பெருமாள் அரையர் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 39 |
| ஏகாதசி - -காயார் கோமடம் சேஷாத்ரிதாசன், காஞ்சிபுரம். | 41 |
| ஸ்ரீஸ்துதியில் ஸ்ரீதேவி - திருமதி மைதிலி சம்பத், செகிந்திராபாத். | 43 |
| ராசிபலன்கள் : நவம்பர் 2023 -டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 45 |
| நீதிக்கதை : உண்மையான பக்தி -திரு. அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி. | 47 |
| சித்திரக்கதை : பத்மவியூகம் | 52 |



சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri.helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : கஜ வாகனத்தில் ஸ்ரீபத்மாவதி தாயார், திருச்சானூர்.
பின்னட்டை : ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம், திருச்சானூர்.

உங்களுடன்



# திருமகளை தியானிப்போம்

***“அக்ஜாநதிமிரம் ஹந்து, சுத்தக்ஞாந ப்ரகாசிகா! ஸர்வைஸ்வர்ய ப்ரதாமேஅஸ்து, த்வத்களாமயி ஸம்ஸ்திதா”*** என்று லக்ஷ்மி ஹ்ருதயம், அதர்வண வேதத்தில் குறிப்பிடப் படுகிறது. அதாவது ஓ ஜகன்மாதா அறியாமை எனும் இருளைப் போக்கும் தூய அறிவின் ஒளி நீயே! அத்தகைய எல்லையற்ற ஒளியின் ஒரு கதிரை என்னுள் செலுத்திடு. எம் தாயே உம்மை வேண்டுகிறேன். எனக்கு எல்லாவிதமான அருளையும் அளித்து என்னை முழுமையாக ஆசிர்வதியுங்கள்.

லக்ஷ்மி என்றால் ஆதாயம், நன்மை, செல்வம், செழிப்பு, நல்வாழ்வு, யோகம் என்பது ருக்வேத வாக்கு. பிரணவ மந்திரமான “ஓம்” மந்திரத்தில் உள்ள “அ, உ, ம” அதாவது “அ”காரம் பரமாத்மா, “உ” காரம் பிராட்’டி, “ம” காரம் ஜீவாத்மா. பரமாத்மாவிடம் ஜீவாத்மாவை சேர்ப்பிப்பவள் பிராட்டி. இதனால்தான் இப்பிரபஞ்சமே ஸ்ரீமஹாலக்ஷ்மியை ஜகன்மாதா என்று போற்றுகிறது.

ஒளி பொருந்தி பிரகாசிக்கும் ஸ்ரீமந்நாராயணனின் “தயை” யின் அடையாளமாக, அளவற்ற கருணையின் அடையாளமாக வீற்றிருக்கின்றாள் பிராட்டி. பரம் பொருளான ஸ்ரீமஹாவிஷ்ணுவின் திருமார்பில் ஸ்ரீவத்ஸம் என்கிற அடையாளமாக மாறி, அந்த பரம்பொருளின் அற்புதமான, ஆச்சரியமான, அமுதமான, எல்லையற்ற, மாறாத கருணை, மன்னிப்பு மற்றும் பக்தி ஆகியவற்றின் அடையாளமாக என்றென்றும் நிற்கின்றாள். ஆதலால்தான் அந்த ஜகன்மாதா “லக்ஷ்மி” என்று போற்றப்படுகிறாள்.

மேலும், உலகில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் இல்லத்தரசிகளின் வடிவில், புனிதமான பெண்களின் வடிவில், செல்வத்தின் வடிவில் ஒளிமயமாக வீற்றிருக்கின்றாள் எனப் புராணங்கள் பேசுகின்றன.

வேதாந்த தேசிகர் மஹாலக்ஷ்மி தாயாரை மங்கலத்திற்கு எல்லாம் மங்கலமானவள் பிராட்டி என்று ஸ்ரீஸ்துதியில் போற்றுகின்றார். நம்மாழ்வாரும் கணப்பொழுதும் மஹாவிஷ்ணுவை பிரியாது அவனுடனே கூடியிருப்பவளை, மஹாலக்ஷ்மியைச் சரணடைவதே சிறப்பானது என்பதை *“அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா”* என்று துதிக்கிறார். ஆதிசங்கரரோ தனக்கு நெல்லிக்கனி அளித்த ஏழை பெண்ணிற்காக “கனகதாரா ஸ்தோத்திர”த்தினால் பிராட்டியை நெகிழச் செய்து பொன் மழை பொழிய வைத்தார்.

அந்த லக்ஷ்மி தேவியாக திருச்சானூர் திருத்தலத்தில் கொலுவீற்றிருக்கும் அலர்மேல் மங்கை எனும் பத்மாவதி தாயாருக்கு கார்த்திகை மாதம் பஞ்சமியில் நிறைவடையும் வண்ணம் “பிரம்மோத்ஸவம்” வருடந்தோறும் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இப்பிரம்மோத்ஸவத்தின்போது, வெவ்வேறு வாகனங்களில், வெவ்வேறு அலங்காரங்களில் ஸ்ரீபத்மாவதி தாயார் திருவீதிகளில் எழுந்தருளி தன் கருணைக்காக வீற்றிருக்கும் பக்தர்களுக்கு காட்சியளிக்கின்றாள். அந்த வாகன சேவைகளை தரிசித்து விட்டு பக்தர்கள் அனைவரும் அவரவர் இல்லங்களுக்குச் செல்ல, அண்டை வீட்டாரோ தரிசனம் நன்றாக இருந்ததா? எனக் கேட்பது வழக்கம். அவ்வார்த்தைகளுக்கு ஏற்றவாறு அத்தாயாரின் மூல, உத்ஸவ மூர்த்தி தரிசனமும், சிறப்பாக அமையும்.

நம் பிறப்பு புனிதமானது என்று திரும்பத் திரும்பச் சொல்வது வழக்கம். அவ்வாறு கூறுவதற்கேற்றபடி நாம் இருத்தலும் வேண்டும். அவை வார்த்தையாக மட்டுமின்றி உண்மையானதாக இருத்தல் வேண்டும். நாம் தாயாரை தரிசிக்கும்போது நேரடியாக தாயாரை கண்ணுற்று மேலே குறிப்பிடப்பட்ட மந்திரத்தை துதித்தல் வேண்டும். அப்போதுதான் தரிசன சித்தியும், மோக்ஷ சித்தியும் கிடைக்கும். பிரம்மோத்ஸவத்திற்குச் சென்றோம்; தரிசித்தோம்; வீட்டிற்கு வந்தோம் என்றில்லாமல் அத்தாயாரை மேற்கூறிய மந்திரத்தால் துதித்து தரிசித்து அத்தாயாரின் அபரிமிதமான கருணையைப் பெற்றிடுவோம்.

புரட்டாசி மாதத்தில் எம்பெருமானின் அவதார திருநட்சத்திரமான திருவோணத்தை ஒட்டி திருமலையில் மிக விசேஷமான பிரம்மோத்ஸவப் பெருவிழா நடைபெற்றது. அதுவும் இந்த ஆண்டு இரண்டு பிரம்மோத்ஸவங்கள் நடைபெற்றன. எம்பெருமானுக்கு உள்ள அதே வைபவமான பிரம்மோத்ஸவப் பெருவிழா கீழே திருச்சானூர் எனப்படும் திருச்சுகனூரில் ஸ்ரீபத்மாவதி தாயாரின் அவதார வைபவமான கார்த்திகை பஞ்சமியை ஒட்டி நடைபெறப் போகிறது. அதனை ஒட்டி இந்தக் கட்டுரையில் பிராட்டியின் வைபவத்தை நாம் காண இருக்கின்றோம்.

வைணவ மரபிற்கு உள்ள ஏற்றங்கள் பல. தீதில் நன்னெறி என்றே குலசேகர ஆழ்வார் குறிப்பிடுகின்றார். வைணவத்தின் ஒவ்வொரு வார்த்தையும் திருமகளான தாயாரோடு தொடர்பு இல்லாமல் இருப்பதில்லை. பெருமாளைக் குறித்துச் சொல்லும் பொழுது ஸ்ரீ:யபதி என்றே சொல்லுகின்றோம். திருவுடைய தேவன் அவன். மஹாலக்ஷ்மி சம்பந்தம் உள்ளதால் திருமால் (திரு+மால்)

நம்மாழ்வார் திருமலை அப்பனிடம் சரணம் புகும் பாசுரம் பாடும்பொழுது அலர்மேல் மங்கையை முன்னிட்டுத் தான் சரணம் புகுகிறார்.

"அகலகில்லேன் இறையும் என்று அலர் மேல் மங்கை உறை மார்பா
நிகர் இல் புகழாய் உலகம் மூன்று உடையாய்! என்னை ஆள்வானே,
நிகர் இல் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே,
புகல் ஒன்று இல்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே."

காரணம் ஸ்ரீசம்பந்தமில்லாத போது பகவத் குணங்கள் சிறப்பதில்லை. பாகவதர்க்கு புருஷகாரம் கிடைப்பதில்லை. பக்தியின் பூரணத்துவம் இருப்பதில்லை. "திருவிலா தேவன்" ஆகி விடுகிறான் அல்லவா.

பொதுவாக வைணவத்தில் பேசும் ஒவ்வொரு சொல்லும் திருமகள் சம்பந்தத்தோடு இருக்கும். திருத்தலம், திருப்பதி, திருமலை, திருவுள்ளம், திருவடி, திருமுடி, ஸ்ரீநிவாசன், திருக்கண்ணமுது, திருமஞ்சனம், திருமடைப் பள்ளி, திருவாய் மொழி, திருமாலை, திருமொழி, திருப்பாவை, திருவரங்கம், திருப்பாற்கடல் என்று எதைத் தொட்டாலும் "திரு" என்கிற ஒலிக் குறிப்பு இணைந்து உன்னதத்தைத் தரும்.

திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்

# கார்த்திகைப் பெருவிழா காணும் அலர்மேல் மங்கைத் தாயாரின் அற்புத வைபவங்கள்



– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி, 94434 39963.



## டிசம்பர் மாதப் பண்டிகைகள்

| | |
|---|---|
| 12 | திருமலையில் அத்யயனோத்ஸவம் ஆரம்பம் |
| 17 | மார்கழி மாதம் ஆரம்பம் |
| 22-26 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 23 | வைகுண்ட ஏகாதசி, திருமலையப்ப ஸ்வாமி தங்கத்திருத்தேர், கீதா ஜெயந்தி |
| 23-ஜன 1 | திருவேங்கடமுடையான் சன்னதியில் வைகுண்ட வாயில் தரிசனம் |
| 24 | ஸ்வாமி புஷ்கரணி தீர்த்த முக்கோட்டி, அனுமத் விரதம் |
| 27 | திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆருத்ரா தரிசனம் |



நாம் தனித்தனியாக பிராட்டியின் பெருமையைக் குறித்தோ, பெருமாளின் பெருமையைக் குறித்தோ பேசுவதில்லை. பேசவும் முடியாது. காரணம் பூவின் மனத்தையும் சூரியனின் ஒளியையும் எப்படிப் பிரிக்க முடியும்? பிரிக்க முடியாது அல்லவா.

தேவியாகிய சீதா பிராட்டியார் பிரிந்திருந்த போதுதான் வாலி வதம் நடந்தது. இராவண சம்ஹாரமும் நிகழ்ந்தது. ஆனால் இவர்களை விட பெரும் பாவம் செய்த காகாசுரன் எனும் இந்திரகுமாரன் (ஜயந்தன்) உயிர் பிழைத்தான்.

எனவே எம்பெருமான் அருள் கிடைக்க முதல் புருஷகாரம் செய்பவள் பிராட்டி. எம்பெருமானின் கோபத்தையும் தணித்து, சேதனர்களாகிய ஜீவாத்மாக்க ளின் தவறுகளையும் மன்னித்து இருவரையும் இணைக் கிறாள். புருஷகார வைபவத்தில் பிராட்டிக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. புருஷகாரத்தின் எல்லை நிலம் மஹாலக்ஷ்மி என்பார்கள்.

சுவாமி ராமாநுஜர் உயிர்களின் மேன்மைக்காக திவ்ய தம்பதிகளைச் சரணடைகிறார். இது நடந்தது ஒரு பங்குனி உத்திரத்தில். அப்போது முதலில் அருளியது சரணாகதி கத்யம். அதன் முதல் சூர்ணை முழுக்க பிராட்டியின் வைபவத்தை பரக்கப் பேசுகிறது. பிராட்டியின் சிறப்புகளை எல்லாம் அடுக்கி அடுக்கிச் சொல்லும் அருமை நம்மை மெய்சிலிர்க்க வைக்கும்.

சம்பிரதாயத்தில் பிராட்டியின் சிறப்பையும், வைபவத் தையும், பெருமைகளையும் *''இந்த மிதுனமே நமக்கு உத்தேச்யம்''* என்று ஒரே வார்த்தையில் அடக்கி விட்டார்கள்.

எம்பெருமானுக்குரிய அத்தனை வைப வங்களும் பிராட்டிக்கும் துல்லியமானது. பிராட்டியின் பெருமை, வைபவம் எல்லாம் எம்பெருமானுக்குரியது.

எனவே எம்பெருமானைச் சொல்வது எல்லாம் பிராட்டிக்குச் சொல்வதாகவும், பிராட்டியின் பெருமைகளை எல்லாம் எம்பெருமானுக்குரியதாகவும் கொள்ளும் மரபு வைணவத்தில் உண்டு.

முதன் முதலில் ஆசாரிய தனியனைச் சொல்லும் பொழுது பிராட்டியை முன்னிட்டுச் சொல்கிறோம். *''லக்ஷ்மி நாத ஸமாரம்பாம் நாத யாமுன மத்யமாம் அஸ்மது ஆசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்''* என்ற சுலோகத்தைச் சொல்லாமல் எந்த வழிபாடும் தொடங்குவ தில்லை.

வைணவ சம்பிரதாயமே மஹா லக்ஷ்மியை முன்னிட்டு அவளுடைய நாதனி டம் இருந்து தொடங்குகிறது என்பதால் “திரு” என்கிற வார்த்தையே முதல் வார்த்தையாக அமைந்திருக்கிறது.

எம்பெருமானுக்கு 12 நாமங்கள் சொல்லி திருமண் அணிந்து கொள்வது போலவே, பிராட்டிக்கும் துவாதச நாமங்கள் சொல்லி ஸ்ரீசூர்ணம் தரிக்கிறோம்.

முதல் ஆழ்வார்கள் திருக்கோவலூரில் இரண்டு விளக்கு ஏற்றினார்கள். அதுதான் அருளிச் செயலின் தொடக்கம். முதல் விளக்கு புறவிளக்கு.

*"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக செய்யச்
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல் மாலை
இடராழி நீங்குகவே என்று"*

இரண்டாம் விளக்கு அக இருட்டை அகற்றும் விளக்கு. இதற்கு அன்பும் ஆர்வமும் தேவை.

*அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடு திரியா நன்புருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணர்க்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்"*

இந்த இரண்டு விளக்கால் அக இருளும், புற இருளும் அகன்றது. எம்பெருமான் காட்சி தந்தான். இந்தக் காட்சியை மூன்றாவது ஆழ்வார் பாடுகிறார்.

*திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கண் அணி நிறமும் கண்டேன் செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கை கண்டேன்
என் ஆழி வண்ணன் பால் இன்று*

இந்தப் பாசுரத்தை கவனித்தால் முதல் வார்த்தை திருக்கண்டேன் என்பது. ஆழ்வார் முதலில் தரிசனம் செய்தது திருவாகிய மஹாலக்ஷ்மி தாயாரைத்தான். பின்னர் அவனுடைய பஞ்சாயுதங்களைத் தரிசிக்கிறார். நிறைவாக சமுதாய சோபையுடன் கூடிய பெருமாளைத் தரிசிக்கிறார்.

இந்தச் சம்பிரதாயத்தை ஒட்டியே, பெருமாள் ஆலயங்களில் முதலில் தாயாரை தரிசனம் செய்து விட்டு, ஆழ்வார் ஆசாரிய தரிசனங்களை முடித்து விட்டு, நிறைவாக பெருமாளைத் தரிசனம் செய்கிறோம். திருமலைக்கு வருபவர்கள் முதலில் திருச்சுகனூரில் உறையும் திருவளர் செல்வியான அலர்மேல் மங்கைத் தாயாரை தரிசனம் செய்த பின், மலையேறி, திருமலை அப்பனை தரிசிக்க வேண்டும்.

திருச்சுகனூரில்தான் அலர்மேல் மங்கைத் தாயாரின் அவதாரம் நிகழ்ந்தது. அங்குள்ள மிகப் பெரிய எண்ணற்ற இதழ்கள் கொண்ட சஹஸ்ர கமலத்தில் கார்த்திகைத் திங்கள் பஞ்சமி திதியில் அவள் அவதாரம் நிகழ்ந்தது என்பதால் பஞ்சமி திதிக்கு உயர்வு கிடைத்தது.

அந்த பஞ்சமி திதியில் நடைபெறும் பஞ்சமி தீர்த்த உத்ஸவம் வேறு எங்கும் காண முடியாத அற்புதமான உத்ஸவம். தீர்த்தனான எம்பெருமான் பஞ்சமி தீர்த்தத்தில்தான் அலர் மேல் மங்கைத் தாயாரை கண்டு தன் மார்பின் மீது ஏந்திக் கொண்டான்.








## அன்னப்பிரசாத மையம்

**தானத்தில் எல்லாம் சிறந்தது அன்னதானம். யாரானாலும் போதும் என்று சொல்லும் ஒரே தானம் அன்னதானம். திருமலையில் நித்ய அன்னதானம் நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. தி.தி.தே. திருச்சானூரிலும் பக்தர்களுக்காக அன்னப்பிரசாத மையத்தை ஏற்படுத்தி, தாயாரின் அருளால் நேரத்திற்கு உணவு பரிமாறி பக்தர்கள் பலருடைய பசியை ஆற்றி வருகின்றது.**

- அன்னம் பரபிரம்ம வடிவம் தயவு செய்து வீணாக்காதீர்கள்.
- அனைத்து பக்தர்களுக்கும் அன்னப்பிரசாதம் எளிதில் கிடைக்கிறது.
- அன்னப்பிரசாதம் பெறுமிடத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு முதலிடம் அளியுங்கள்.
- திருமலையில் கைக்குழந்தைகளுக்கு தேவையான பால் எப்பொழுதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையானவர்கள் வைகுண்டம்-2 அன்னப்பிரசாதம் அலுவலகத்தை அணுகி பெற்றுக் கொள்ளுங்கள்.

பஞ்சமி திதியில் நடைபெறும் பஞ்சமி தீர்த்தம் அதி விசேஷமானது. எம்பெருமானின் கருட சேவையைப் போல கார்த்திகை பஞ்சமி தீர்த்தம் தாயார் பிரம்மோத்ஸவத்தின் தலை யாய சிறப்பு எனலாம்.

திருமலை அப்பன் வைபவம் குறித்து அனேகமாக எல்லா ஆழ்வார்களும் பாடி இருக் கிறார்கள். தனித்தனி பாசுரங்களும் உண்டு. பதிகங்களும் உண்டு.

நம்மாழ்வார் நான்காம் பத்து ஐந்தாம் திருவாய் மொழி பாடத் துவங்குகிறார். பகவானின் திருவருள் பெற்ற ஆழ்வாரின் ஆனந்தம் கரை புரண்டு ஓடுகிறது. தம்முடைய பேறல் லவோ இத்தகைய இறையானந் தத்தைப் பெற வைத்தது என்று திரு வாய் மொழியைத் தொடங்குகிறார்.

*“வீற்றிருந்து ஏழுலகம் தனிக்கோல் செல்ல வீவில் ஆற்றல்மிக்கு ஆளும் அம்மானை”* என்று ஆரம்பிக்கிறார். அதன் பலச்சுருதி பாசுரம் பிராட்டியின் பெருமையை, அதிலும் வேங்கடத்தில் உறையும் தாயாரின் (பத்மாவதி தாயாரின்) வைபவத்தைப் பேசுகிறது. இரண்டு பாசுரங்களுக்கு முன்,

*நமக்கும் பூவின்மிசை நங்கைக்*
*கும் இன்பனை ஞாலத்தார்*
*தமக்கும் வானத்தவர்க்கும்*
*பெருமானைத் தண் தாமரை*
*சுமக்கும் பாதப் பெருமானைச்*
*சொல்மாலைகள் சொல்லுமாறு*
*அமைக்க வல்லேற்கு இனியாவர்*
*நிகர் அகல் வானத்தே?*

என்ற பாசுரத்தில் பிரணவத்தின் பொருளையே கொடுத்து விடுகின் றார். நமக்கும் என்பதால் சேதனர்க ளுக்கும், பூவின் விசை நங்கைக்கும் என்பதால் பிராட்டிக்கும், இன்பன் என் பதால் ஈஸ்வரனையும் இணைத்துப்



# நாராயணீயத்தில் மஹாலக்ஷ்மி அவதாரம்

மலையாள நாட்டின் பெருமை உடைய நூலான நாராயணீயம் மேல் பத்தூர் நாராயண பட்டாதிரியால் எழுதப் பட்டது. இதில் சிறப்பு என்னவென்றால், குருவாயூரப்பனே இந்த நூலில் வரும் ஒவ்வொரு நிகழ்வுகளையும் தலையசைத்து அங்கீகரித்துள்ளார். பட்டாதிரி தன் குருவின் நோயை, தான் ஏற்றுக் கொண்டு அவதிக்குள்ளானார். அதை போக்குவதற்காக வியாசர் எழுதிய ஸ்ரீமத்பாகவத சுருக்கமாக நாராயணீயத்தை எழுதினார்.

தசகம் 28ல் ஸ்ரீமஹாலக்ஷ்மி அவதாரம் குறித்து விளக்கி உள்ளார். மொத்தம் 10 சுலோகங்கள் கொண்டவை ஒரு தசகம். தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந் தார்கள். அப்போது அதில், ஆலகாலவிஷம் தோன்றியது. அதை பரமசிவன் அருந்தி எல்லோரையும் காத்தார். பின்னர் காமதேனு என்ற தேவலோக பசு, உச்சைரவஸ் என்ற குதிரை, ஐராவதம் என்ற யானை, கற்பக மரம், அப்சரஸ்கள் தோன்றி யது. இவைகளை தேவர்கள், ரிஷிகள் அவர்களுக்கேற்ப எடுத்துக் கொண்டார்கள்.

*ஜகதீச பவத்பரா ததானீம்*
*கமனீயா கமலா பபூவ தேவி*
*அமலாமவலோக்ய யாம் விலோல:*
*ஸகலோ அபி ஸ்ப்ருஹயாம் பபூவ லோக*

ஜகதீசா! உம்மைத் தவிர எதையும் மேலாக கருதாதவளும், மனதிற்கு இனியவளுமான மஹாலக்ஷ்மி தேவி தோன்றினாள், அவளைப்பார்த்து மனங்கவரப் பெற்ற உலகனைத்தும் அடைய விரும்பிற்று.



**திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா.**



## நாராயணீயத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மி திருக்கல்யாணம்

பாற்கடலில் தோன்றிய ''ஸ்ரீ''யின் அழகு, பொலிவு, தேஜஸ் இவைகளைக் கண்டு, யார் இவள்? என்றும், தம்மிடம் வருவாளா என்றும் எல்லோரும் ஸ்தம்பித்து ஆவலுடன் நின்றார்கள்.

ஆனால், "ஸ்ரீ", திருமாலுக்கே உரியவள் என்பதால், தேவேந்திரன் ரத்னமயமான பீடத்தை அளித்தான். ரிஷிகள், புனித தீர்த்தங்களால் ஸ்ரீதேவிக்கு வேத மந்திரங்கள் ஓத, அபிஷேகம் செய்தார்கள். பின்னர், லக்ஷ்மியை பல ஆபரணங்களால் அலங்கரிக்க, தாயாரும் மிக மிக அழகாகத் தோற்றமளித்தாள். அவளுடைய கண்களின் குளிர்ந்த பார்வையால் உலகமனைத்தும் செழிப்பானது.

மஹாலக்ஷ்மி, தன் திருக்கைகளில் வண்டுகள் மொய்த்த ஸ்வயம்வர மாலையை எடுத்துக் கொண்டு, அன்ன நடையிட்டு பாதங்களில் இருக்கும் சிலம்புகளில் ஒலி இசைக்க, ஸ்ரீமந்நாராயணனை நாடினாள். பல தேவதைகள், ரிஷிகள் இருந்தும், நாராயணனை நாடியது ஏன்? என்றால், இவன்தான் *''குறை ஒன்றும் இல்லாத கோவிந்தன்''* என்பதால்தான்.

உலகிற்குத் தாயாக இருப்பவளான, "ஸ்ரீ" வேறு யாரிடத்திலும் பற்றில்லாதவள், திருமாலின் மீது அதீத காதல் கொண்டு, மாலையை அணிவித்தாள். மஹாவிஷ்ணு, உடனே, தன் திருமார்பில் இடம் கொடுத்துப் பெருமைப்படுத்தினார். அவள் *''அகலகில்லேன்''* என்று இருந்ததால், எல்லாம் செழுப்புற்றது. இவ்வாறு லக்ஷ்மிநாராயண கல்யாண வைபோகத்தை நாம் நாராயணீயம் ஸ்தோத்திரங்கள் மூலம் அனுபவிக்கலாம்.

விஷ்ணு புராணத்தில், எங்கெல்லாம் மஹாவிஷ்ணு அவதரிக்கிறாரோ, அவருடன் திருமகளும் அவதரிப்பாள். அவ்வாறு இராமர் சீதை, கிருஷ்ணர் ருக்மிணி என்பதை நாம் சேவிக்கலாம்.

– திருமதி ராஜலக்ஷ்மி,கேரளா.

பாடுகின்றார். இங்கே அகாரமும் இணைந்து பிரணவத்தின் ஒலியாக இந்தப் பாசுரம் நமக்கும் அவனுக்கும் உள்ள உறவையும், பிராட்டியின் புருஷகாரத்தையும் இணைத்துச் சொல்லுகின்றது. இதில் நிறைவான பலச்சுருதி பாசுரம்.

*மாரி மாறாத தண் அம் மலை*
*வேங்கடத்து அண்ணலை*
*வாரி மாறாத பைம்பூம் பொழில்*
*சூழ் குருகூர் நகர்க்*
*காரி மாறன் சடகோபன் சொல்*
*ஆயிரத்து இப்பத்தால்*
*வேரி மாறாத பூமேல் இருப்பாள்*
*வினை தீர்க்குமே*

இத்திருவாய்மொழி கற்பாருடைய தீ வினைகளையெல்லாம் பெரிய பிராட்டியார் தீர்த்தருளக் கூடுமென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிறார். மழை ஒரு நாளும் மாறாதபடியாலே குளிர்ந்து அழகியதான திருவேங்கட மலையிலே, தாழ்ந்தார்க்கு முகங்கொடுக்கைக்காக வந்து நிற்கிற சீலம் பொருந்திய எம்பெருமான் விஷயமானது இப்பதிகம்:

"வேரிமாறாத பூமேல் இருப்பாள் வினை தீர்க்கும்'' என்கையாலே பிராட்டிக்கும் எம்பெருமானைப் போலவே பலனளிக்குந்திறன் உண்டென்று சிலர் சொல்லுவார்கள். நம்மை எம்பெருமான் அங்கீகரிப்பதற்கு இடையூறாக இருக்கும் தீவினைகளைப் புருஷகார க்ருத்யத்தாலே பிராட்டி போக்குவாள். அந்தப் பிராட்டிதான் அலர்மேல் மங்கைத் தாயார், கார்த்திகை பிரம்மோத்ஸவத்தில் அவளைப் பணிவோம். அனைத்தும் பெறுவோம்.

*பாசுரம் அறிவோம்...*

# மலைநாட்டு மஹாலக்ஷ்மியின் மஹிமை

– திருமதி ராஜலக்ஷ்மி,
கேரளா. 9946128102

பெரிய பிராட்டியின் வைபவத்தை மலையாள திவ்யதேச பாசுரங்கள், நூல்கள், ஸ்தோத்திரங்கள், தலங்களையும் நாம் அனுபவிக்கலாம். நாவாய் முகுந்தனை நம்மாழ்வார், தாயார்களுடன் அனுபவிக்கிறார். இந்த மலையாள திவ்ய தேசத்தில் தாயாருக்கு தனி சந்நிதி உண்டு. மற்ற எல்லா கோயில்களிலும் அவள் "அகலகில்லேன்" என்று பகவானுடன் சேர்ந்தே திருமார்பில் அல்லது அருகிலோ அருள்பாலிக்கிறாள்.

**மலைநாட்டு திவ்ய தேசங்களில் மஹாலக்ஷ்மி**

திருமங்கை மன்னன், குலசேகரர், நம்மாழ்வாரால் பாடல் பெற்ற தலம் இந்த 13 மலைநாட்டு திவ்ய தேசங்கள். கேரளம் மற்றும் தமிழ் நாட்டின் எல்லைகளைச் சேர்ந்ததாகும். *1) திருநாவை* – தனிக்கோயில் நாச்சியாராக, மலர்மங்கை தாயாராக அருள்பாலிக்கிறாள் மஹாலக்ஷ்மி. இங்கே மஹாலக்ஷ்மி மற்றும் கஜேந்திர யானை–நாவாய் முகுந்தனை அர்ச்சனை செய்ததாக தல வரலாறு. இங்கே லக்ஷ்மி சந்நிதியை "ஸ்ரீகோயில்" என்று கூறுவர். நம்மாழ்வார் திருவாய்மொழி பாசுரத்தில் ***"மண்ணாளன் மலர் மங்கைக்கும் மண் மடந்தைக்கும்"*** என்று தாயாரை கூறுகிறார்.

*2) திருவித்துவக்கோடு* – பத்மாசினி, வித்துவக்கோட்டு வல்லி, பத்மபாணி நாச்சியார் என்று அருள் பாலிக்கிறாள் மஹாலக்ஷ்மி. இங்கே லக்ஷ்மி மற்றும் கஜேந்திரன் இருவரும் தாமரை மலர்களால் அர்ச்சனை செய்ய, ஒரு முறை கஜேந்திரனுக்கு தாமரை கிடைக்க வில்லையாம். உய்ய வந்த பெருமாளை வருத்த முடன் கஜேந்திரன் துதிக்க, அவர் மஹாலக்ஷ்மி எப்போதும் என்னோடு கூடியே இருப்பார். இனி நீயே என்னைத்துதி எனக்கூற, அனைத்து தாமரைகளையும் கஜேந்திரனும் வைத்து அர்ச்சனை செய்து அருள் பெற்றதாக தல வரலாறும் உண்டு.

*3) த்ரிகாக்கறா (திருக்காட் கரை)* – வாமன மூர்த்தி திவ்ய தேசம். மலையாள தேசத்தில் "திருவோணம்" பண்டிகை இந்த திவ்ய தம்பதியான "வாத்சல்யவல்லி (பெருஞ்செல்வ நாயகி) சமேத காக்கறையப்பன்" ஸ்வாமிக்கு கொண் டாடப்படுகிறது. வாமன அவதாரத்தில் அவர் பிரம்மச்சாரி சிறுவனாக இருந்த போது, தன் மார்பில் உள்ள நாச்சியாரை மான் தோல் கொண்டு மறைத்தார். இதற்கு இரண்டு கார ணங்கள் உண்டு. அவதாரம் செய் ததோ "வாமன மூர்த்தியாக – பிரம்மச்சாரி", பிராட்டியோ திருமார்பி லிருந்து இறங்க மறுத்தாள். 2வது காரணம், அவள் இந்த தேசத்தில் "வாத்சல்ய லக்ஷ்மி"யாக தாயின் உருவமாக அருள்கிறாள்.





அவ்வாறு செய்தால், மகாபலியின் சொத்துக் களை எவ்வாறு பறிக்க முடியும். அதனால், மான் தோல் போட்டு மறைத்தார் என்று ஒரு வியாக்யானம் உண்டு. இந்த நிகழ்வை ரசிக்க ரிஷிகளுக்கு இக்கோயிலில் அருள்கிறார் லக்ஷ்மி நாராயணர்.

*4)திருமூழிக்களம்* – “மதுரவேணி சமேத திருமூழிக்களத்தான்” என்றும், இராமாயணத்தில், கைங்கர்ய சிரோன்மணியாக விளங்கிய லக்ஷ்மண னின் பெயரையும் சேர்த்து வைத்திருக்கிறார் பகவான். ஹரிதா மகரிஷிக்கு திவ்யோபதேசம் செய்ததால் இப்பெயர் வந்தது. தாயாரின் பெருமையைச் சேர்த்து “ஸ்ரீசூக்திநாதன்” என்றும் திருமாலுக்கு மற்றொரு பெயர் உண்டு.

*5)திருவல்லவாய்* – இத்தலத்தில் “செல்வத் திருக் கொழுந்து நாச்சியார்” அல்லது “வாத்சல்ய தேவி” என்றும், பகவானை “ஸ்ரீவல்லபன்” என்று விராட் புருஷனாகவே” சேவிக்கிறார்கள். இது பல யுகங்க ளோடு தொடர்புடையது. பகவானின் அழகில் மூழ்கி, பிராட்டி பிரார்த்தனை செய்து மணம் புரிந்ததாக பல தல புராணங்கள் உள்ளன. அதில், மஹாலக்ஷ்மி “வல்லபன்–கணவன்” என்று ஆசைப்பட்டு பாற் கடலில் இருந்து தோன்றி மாலை இட்டாள் என்கிறது.

பகவான், ஒரு அசுரனை பிரம்மச்சாரி வடிவம் கொண்டு, கொன்று அவ்வூரை காத்தார். அப்போது, அவ்வூரில் உண்ணும் போது, ஸ்ரீமஹாலக்ஷ்மி வந்து “உப்பு ஊறுகாய்” பரிமாறினாள் என்றும், எல்லோரும் எவ்வாறு இந்த எளிய பிரம்மச்சாரி ஒரு ராக்ஷஸனை கொல்ல முடியும்? என்று வினவியபோது, அவர், தன் உத்தரீயத்தை எடுத்து, தன் திருமார்பில் உள்ள ஸ்ரீவத்ஸத்தையும், ஸ்ரீமஹாலக்ஷ்மியையும், அரக் கனை கொன்ற சுதர்சன சக்கரத்தையும் காண்பித் தார். எல்லா விதத்திலும் ஸ்ரீயுடன் சேர்ந்திருப்பதை பகவான் இந்நிகழ்வுகள் மூலம் காண்பிக்கிறார்.

*6) திருக்கடித்தானம்* – “கற்பகவல்லி சமேத அற்புத நாராயணர் அல்லது அம்ருத நாராயணர்” என்று சகாதேவனால் வழிபட்ட தலமாகும். இங்கே எல்லா மாதமும் திருவோணத் தீபம் சிறப்பாகும்.

***ஒருவர் இருவர் ஓர் மூவர் என நின்று***
***உருவுகரந்து உள்ளுந்தோறும் தித்திப்பான்***
***திருஅமர் மார்வன் திருக்கடித்தானத்தை***
***மருவி உறைகின்ற மாயப்பிரானே.***

நம்மாழ்வார் திருவாய்மொழியில் “திருவமர்” என்ற தாயாரின் பெருமையை அவள் அதிகாரத்தைப் புகழ்கிறார். கற்பக விருக்ஷம், நாம் கேட்பதை கொடுக் கும். அது பாற்கடலில் தோன்றியது. ஆனால், பகவானை ஆழ்வார்கள், கற்பக விருக்ஷத்தை விட கொடுப்பதில் சிறந்தவர் என்று போற்றுகிறார்கள். ஏனெனில் பகவான் தன்னையே கொடுக்கத் தயாராக உள்ளார். தன் அடியாருக்காக அப்படி இருக்கக் காரணம்தான் இந்த கற்பக வல்லித்தாயார்.

*7) திருச்செங்குன்றூர்* – இத்திவ்ய தேசத்தில் ரக்த பங்கஜ வல்லி (செங்கமல வல்லி) சமேத இமயவரப்பன்” வீற்றிருக்கிறார். யுதிஷ்டிரர் சேவித்த தாக ஐதீகம். இங்கே பகவான் இடத்தையே “ஸ்ரீ கோயில்” என்று நாச்சியாரின் முக்கியதுவத்தை உணர்த்துகிறது போல் பெயர் வைத்துள்ளனர். தாயாரின் மேனி சிவந்து காணப்படும் என்பதால்









“ரக்த” என்றும், அவள் தாமரை போல் மேன்மை உடையவளாதலால் “பங்கஜ” என்றும், இங்கே ஸ்வாமியின் திருமார்பில் சேவிக்கிறோம்.

*திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு அதனுள் கண்ட அத்திருவடி என்றும்*
*திருச்செய்ய கமலக்கண்ணும் செவ்வாயும் செவ்வடியும் செய்யகையும்*
*திருச்செய்யகமல உந்தியும் செய்ய கமல மார்பும் செய்ய உடையும்*
*திருச்செய்யமுடியும் ஆரமும்படையும் திகழ என் சிந்தையுளானே.*

நம்மாழ்வார், திருவாய்மொழியில் இப்பாசுரத்தில் “திரு” என்று பகவானின் எல்லா உறுப்புகளும், எல்லா ஆபரணங்களும், எல்லா விசேஷமும் திருவாகக் கொண்டாடுகிறார். தாயார் இருக்கும் திருமாலுடைய மார்பு சிவந்து காணப்படும்; பல அழகான வடிவங்களையும், அனுபவங்களையும் இந்தப் பெருமாளை சேவிக்கும் போது அச்சம் நீங்கி உள்ளது என்றும் கூறுகிறார்.

*8) திருப்புலியூர்* – இத்திவ்ய தேசத்தில் “பொற்கொடி நாச்சியார் சமேத மாயபிரானாக” சேவை சாதிக்கிறார். இங்கு பீமன் சேவித்ததாக கூறப்படுகிறது. சப்த ரிஷிகளுக்கும், இந்திரனுக்கும் – பகவான் நாச்சியாருடன் சேவை சாதித்ததாக தல புராணம். இங்கேயும் “ஸ்ரீ கோயில்” என்றே பகவானின் கர்பக்ருஹம் கூறப்படுகிறது. தாயார் “பொன் போன்ற கொடியாக” பாற்கடலில் இருந்து தோன்றியபோது அவள் திருமேனி காட்சி அளித்ததால் அப்பெயருக்கான காரணம்.

கருமாணிக்க மலை மேல் .... திருமார்வு வாய்கண்கை. திருமார்பு என்று தாயார் இருக்கும் இடத்தை “திரு” என்று உயர்த்திக் கூறியுள்ளார். *“திருஅருள் மூழ்கி வைகலும் செழுநீர்நிறக் கண்ணபிரான், திருஅருள்களும் சேர்ந்தமைக்கு அடையாளம் திருந்தவுள, திருஅருள் அருளால் அவன் சென்று சேர்தண் திருப்புலியூர், திருஅருள் கமுகு ஒண் பழத்தது மெல்லியல் செவ்விதழே”* என்று திருவின் அருளை (பெருமாள் மற்றும் பிராட்டி) பாசுரத்தில் வைத்துள்ளார். *“நின்ற மாயப் பிரான் திருவருளாம் இவள் நேர்பட்டதே”* என்று பெருமாளுடைய திருவருளைப் பாடி உள்ளார்.

*9) ஆரன்முலா* – இத்தலத்தில் பார்த்த சாரதியாக பத்மாஸனி தாயாருடன் சேவை சாதிக்கிறார். இது அர்ஜுனன் சேவித்த தலம். இங்கேயும் “ஸ்ரீகோயில்” என்றே கர்பக்ருஹம் கூறப்படுகிறது. இக்கோயிலில் சபரிமலை ஆபரணம் வைக்கப் படுகிறது. ஆரன்முலா கண்ணாடி, துலாபாரம், திருவோணம், கருடசேவை, அன்னதானம், ஏகாதசி, ஆயுர் வேதம், படகுப்போட்டி போன்ற பல பிரபலமான விஷயங்கள் அடங்கி உள்ளன.

*10) திருவண்வண்டூர்* – இத்திவ்ய தேசத்தில் கமல வல்லி நாச்சியாராக பாம்பனையப்பன் பெருமாள் அருள்பாலிக்கிறார். பார்கவியாக அவதாரம் எடுத்த மஹாலக்ஷ்மியின் தந்தையான ப்ருகு இத்தலத்தில் வழிபட்டார். இங்கேயும் “ஸ்ரீகோயில்” என்றே பகவானின் கர்பக்ருஹம் கூறப்படுகிறது.

*11) திருவனந்தபுரம்* – பத்மநாப ஸ்வாமி அருகிலேயே ஹரி லக்ஷ்மி (ஸ்ரீதேவி) என்ற திருநாமத்தோடு விளங்குகிறாள். இங்கே பூதேவியும் அருள்கிறாள். தாயார், திருமார்பைத் தவிர, அவர் அருகில் அமர்ந்த திருக்கோலத்தில், அழகாக அலங்கரித்து விளங்குகிறாள். பத்மநாப ஸ்வாமியை மூன்று வாயில்கள் மூலமாகத்தான் தரிசிக்க முடியும். அதனால், ஹரி லக்ஷ்மி மற்றும் பூமி தேவியை இரண்டாம் மற்றும் மூன்றாம் வாசல் நடுவில் தரிசிக்கலாம். நடு வாசலில் உற்சவ மூர்த்தி மற்றும் தாயாரை தரிசிக்கலாம். ***''மாய்ந்து அறும் வினைகள் தாமே மாதவா என்ன நாளும்''*** எனப் பாசுரமிட்டு "மாதவா" என்று மஹாலக்ஷ்மியை முன்னிட்டுப் பாடுகிறார் நம்மாழ்வார்.

*12) திருவட்டாறு* – மரகதவல்லி சமேத ஆதி கேசவ பெருமாள் சயன கோலத்தில் வீற்றிருக் கிறார். இங்கே இருக்கும் விளக்குகள் மஹா லக்ஷ்மி வடிவில் அமைக்கப்பெற்றுள்ளது. ஒவ்வொரு விளக்கும் வித்தியாசமாகக் காணப் படும். இங்கே ஸ்ரீதேவியும் அமர்ந்த திருக்கோலத் தில் பகவானின் சயனத் திருக்கோலத்தின் முன்பு காட்சியளிக்கிறாள். திருவனந்தபுரம் ஸ்ரீபத்மநாப ஸ்வாமி கோயிலைப் போலவே காணப்படும் இக்கோயில் தமிழ் நாட்டில் உள்ளது.

***திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை தன்னோடும்***
***திகழ்கின்ற திருமாலார் சேர்விடம் தண் வாட்டாறு***
***புகழ்நின்ற புள்ஊர்தி போர் அரக்கர் குலம் கெடுத்தான்***
***இகழ்வு இன்றி என் நெஞ்சத்து எப்பொழுதும் பிரியானே.***
***எப்போதும் ஆழ்வார் ''திருமார்பில்''***

எனப் பிராட்டி இருக்கும் திருமார்பையே போற்று கிறார்.

*13.திருவண் பரிசாரம்* – நம்மாழ்வாரின் தாயாரான உடைய நங்கையின் ஊராகும். இங்கே கமல வல்லி சமேத திருவாழ்மார்பன் என்ற திருநாமத்தோடு அருள்கிறார். இவ்வூரின் பெயர், தாயாரின் பெயரை சேர்த்தே உள்ளது. "திருவாழ் மார்பன்" என்ற திருநாமத்தோடு அருள்கிறார். இவ்வூரின் பெயரான திருவாழ் மார்பன் என்றால் திருவை மார்பில் வைத்திருப்பவன் என்றும், திருமார்பில் வாழ் கிறாள் என்றும், திருவின் மார்பில் வாழ்பவன் என்றும் பல பொருள் கொள்ளலாம். குலசேகர ஆழ்வார் இந்தக் குளத் தில் குளித்து மனம் ஆனந்தம் அடைந்ததாகக் கூறுவர். தாயார் வாழும் ஊர், ஆனந்தம் அளிக்கும் என்பதாகும். ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வாரை நமக்கு அருளிய ஊராகும்.

## நாராயணீயத்தில் ருக்மிணி திருக்கல்யாணம்



**ருக்மிணி, மஹாலக்ஷ்மியின் அவதாரம். கண்ணனை அடைவதற்கு, அவள் கௌரி கோயிலில் காத்திருந்தாள். அப் போது, கண்ணன் *''சந்திர முகீதி தாம்''* சந்திரமுகி, நீ எங்கே போகிறாய்" என்று அவள் கையைப் பற்றிக் கொண்டு ஒரு நொடியில் தேரில் அழைத்துச் சென்றார். பின்னர் திருக்கல் யாணம் செய்து கொண்டதை மிக ச்ருங்கார ரசத்துடன் கூறியுள்ளார். *''புரமயா ரமயா ஸஹ காந்தயா''.***

**பெருமாள் தாயாரின் சேர்த்தி மிக முக்கியமானது. அதுதான் இந்த உலகை வாழ்விக்கிறது. மலை நாட்டு திவ்ய தேசங்கள் 13 அதில் பெரும்பாலும், பிராட்டியை பெருமாளின் திருமார்பிலேயே சேவிக்கலாம். அதனால்தான் எப்போதும் சந்தனக் காப்பு சாத்துகிறார்கள். "களபம்" என்ற சந்தனம், கற்பூரம், குங்குமப்பூ அரைத்து திருமஞ்சனம் செய்வதும், அலங்காரம் செய்வதும் மலைநாட்டு திவ்ய தேசங்களின் சிறப்பு.**

**இவ்வாறு செய்வதால் பெருமாளும், அவருடைய திருமார்பில் அலங்கரித்து அமர்ந்து தன் திருக்கண்களால் எல்லா ஜீவராசிகளையும் அருள்விக்கும் ஜகன்மாதாவின் மனமும் குளிர்கிறது என்பது ஐதீகம்.**




# வேத ஜோதிடத்தில் 12 வீடுகள்

ஆகஸ்ட் மாத இதழின் தொடர்ச்சி...

– முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
திருவல்லிக்கேணி, 9444392595

## வேத ஜோதிடத்தில் வீடுகள்

ஜோதிடத்தில், 12 ராசிகளைப் போலவே 12 வீடுகளும் ஒருவரின் வாழ்க்கைக்கு அடித்தளத்தை உரு வாக்குகின்றன என்று ஆகஸ்ட் மாத இதழில் அறிந்தோம். இருப்பினும் அவை இராசி சக்கரத்தைப் போலவே இல்லை. இந்த வீடுகள் அனைத்தும் வெவ்வேறு அடை யாளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் உங்கள் வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட கூறுகளைக் குறிக்கின் றன என்பதைத் தொடர்ந்து அறிவோம்.

## 6வது வீடு

இந்த வீடு முக்கியமாக உங்கள் உடல் நலம், ஆரோக்கியம் மற்றும் உங்கள் அன்றாட வாழ்க்கை முறைக்கு ஒத்திருக்கிறது. நிச்சயமாக நீங்கள் பிறவி எடுத்த உடல் முதல் வீட்டின் கீழ் வரும். ஆனால் உங்கள் உடலைப் பாதிக்கும் தினசரி அடிப்படையில் நீங்கள் செய் யும் தேர்வுகள் வேத ஜோதிடத்தில் 6வது வீட்டில் காணப் படுகின்றன.

6வது வீடு அரி பாவம் என்றும் அழைக்கப்படுகிறது. அரி என்றால் "எதிரி". எனவே இந்த வீடு கடன்கள், தடைகள், எதிரிகள் மற்றும் சிரமங்களுடன் தொடர்புடையது. இருப்பினும் ராகு தனது ஜாதகத்தில் 6ஆம் வீட்டில் அமர்ந்திருப் பவர் தோற்கடிக்க இயலாது. இது துலாம் ஆற்றலுடன் ஒத்துப் போகிறது.

உடல் உறுப்புகளான இடுப்பு, அடிவயிறு, சிறுநீரகம், தொப்புள், சிறுகுடல், பெருங்குடலின் மேல் பகுதி போன்றவற்றை இந்த வீடு ஆட்சி செய்கிறது. பலவீனமான 6ஆம் வீடு மலச்சிக்கல், குடல் அழற்சி, குடலிறக்கம் மற்றும் மனநோய் போன்ற நோய்களை உண்டாக்கும்.

## 7வது வீடு

வேத ஜோதிடத்தில் 7வது வீடு (சந்ததி) முதல் வீட்டிற்கு (அசென்டண்ட்) நேராக அமைந்துள்ளது. இந்த வீடு யுவதி பாவம் என்றும் அழைக்கப்படுகிறது. இது உங்கள் மனைவி/கூட்டாளியின் வீடு. இது வணிக கூட்டாண்மை உட்பட அனைத்து வகையான கூட்டாண்மைகளின் இல்லமாகும். மேலும் உங்கள் உறவுகளின் இருண்ட பக்கத்தையும், நீங்கள் உருவாக்கும் கூட்டாண்மைகளை யும் கையாள்கிறது. ஏழாவது வீட்டின் வழியாக நகரும் கிரகங்கள் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதன் மூலமும், விஷயங்களை அதிகாரப் பூர்வமாக்குவதன் மூலமும் ஒப்பந்தங்களை முடிக்க உதவுகின்றன.

## 8வது வீடு

வேத ஜோதிடத்தின் 8வது வீடு, ரந்திர பாவம் என்றும் அழைக்கப்படுகிறது. இது மரணம், நீண்ட ஆயுள் மற்றும் லாட்டரி

போன்ற திடீர் நிகழ்வுகளை ஆளுகிறது. இது செல்வத்துடன் தொடர்புடையது. திடீர் இழப்புகள், ஆதாயங்கள், சொத்துக்களின் பங்கு 8வது வீட்டின் கீழ் வரும் ஒருவரது ஜென்ம ராசிக்கு 8–ம் வீட்டில் சனி அமர்ந்திருந்தால், அந்த நபருக்கு தந்தை வழி சொத்து வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இந்த வீடு மர்மங்கள் மற்றும் மாற்றங்களின் வீடாகவும் உள்ளது. இது மனச்சோர்வு, நாள்பட்ட நோய், துன்பங்கள், மன அமைதியின்மை, சிறை வாசம் போன்றவற்றை பாதிக்கப்பட்ட நபருக்கு கொண்டு வரலாம். இருப்பினும், ஒரு நேர்மறையான குறிப்பில் நமது வேதஜோதிடர், 8 ஆம் வீட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் வலுவான உள் உணர்வு திறன்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், அத்தகையவர்கள் உளவியல், ஜோதிடம், கணிதம் மற்றும் அமானுஷ்ய நடவடிக்கைகள் போன்ற துறைகளிலும் தேர்ச்சி பெற முடியும் என்றும் கூறுகிறார். இவ்வடையாளத்தால் நிர்வகிக்கப்படும் பல்வேறு உடல் பாகங்களில் இடுப்பு எலும்புகள் மற்றும் வெளிப்புற பாலியல் உறுப்புகள் அடங்கும்.

### 9வது வீடு

உண்மை, கொள்கைகள், கனவுகள் மற்றும் உள்ளுணர்வுகள் அனைத்தும் ஒன்பதாவது வீட்டை வரையறுக்கின்றன. இந்த வீடு வேத ஜோதிடத்தில் தர்ம பாவம் என்றும் அழைக்கப்படுவதால், இது உங்கள் மத உள்ளுணர்வு, குடியேற்றம், நல்ல கர்மா, தர்மம், நெறிமுறைகள், உயர்கல்வி கற்றல், நற்செயல்கள் மற்றும் தொண்டுகளில் ஒருவரின் நாட்டம் ஆகியவற்றைக் கையாள்கிறது.

9வது வீடு தனுசு சக்தியுடன் ஒத்துப்போகிறது. இது வியாழனால் குறிக்கப்படுகிறது. இது இந்த வீட்டை அதிர்ஷ்டம் மற்றும் ஆதரவின் வீடாக மாற்றுகிறது.

இந்த வீட்டின் கட்டுப்பாட்டில் உள்ள உடலின் பல்வேறு பாகங்கள் தொடைகள், தொடை எலும்புகள், எலும்பு மஜ்ஜை, இடது கால் மற்றும் தமனி அமைப்பு. உங்கள் ஜாதகத்தில் 9வது வீட்டில் இது வலுவாக இருந்தால், பயணம், உயர் கல்வி மற்றும் வெளி நாட்டு குடியேற்றத்திற்கான வாய்ப்புகள் அதிகம்.

தொடர்ந்து அலசுவோம்...

## பவித்ரோத்ஸவம்



வருடம் முழுவதும் தெரிந்தோ, தெரியாமலோ நடக்கும் தவறுகளுக்கு பரிகாரமாக பாத்ரபத (ஆவணி) மாதத்தில் மூன்று நாட்கள் நடைபெறும் உத்ஸவம் பவித்ரோத்ஸவம். இந்த உத்ஸவத்தின் போது ஆலயம் சுத்தி செய்த பின்னர் ஆலத்தில் எழுந்தருளியுள்ள அனைத்து மூல மூர்த்திகளுக்கும் பவித்திர மாலைகள் சமர்ப்பிக்கப் படுகின்றன. அதனுடன் உற்சவ மூர்த்திகளுக்கும் பவித்திர மாலைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.



இந்த உத்ஸவம் அங்குரார்ப்பணத்துடன் தொடங்கி மூன்று நாட்கள் மிக விமரிசையாக நடைபெறும். பவித்திர சமர்ப்பணை, ஹோமங்கள் எனப் பலவிதமான நிகழ்வுகளுடன் அனைத்து விக்ரகங்களுக்கும் பவித்திர மாலைகள் அணிவிக்கப்பட்டு, மாலை நேரங்களில் ஸ்ரீபத்மாவதி தாயார் திருவீதி உலா வருவது சிறப்பு அம்சமாகும்.









# தீபாவளி அன்றும் இன்றும்

– திரு. ஹரிசங்கர்,
கும்பகோணம்,
9940172897

தீபாவளி என்பது இந்துக்களின் மிகவும் முக்கியமான பண்டிகைகளில் ஒன்றாகும். இப்பண்டிகை பல நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும் பண்டிகையாக தீபாவளி கொண்டாடப் படுகிறது.

தீபாவளியன்று அனைவரும், அதிகாலையில் எழுவர். எண்ணெய்க் குளியல் (கங்கா ஸ்நானம்) செய்வர். கங்கா ஸ்நானம் ஆச்சா என்று அன்றைய தினம் ஒருவருக்கொருவர் கேட்டுக் கொள்வது வழக்கம். தீபாவளி என்றாலே நம் அனைவருக்கும் கொண்டாட்டம்தான். அதிலும் குறிப்பாக சிறு பிள்ளைகளுக்கு. ஏனென்றால் பட்டாசு வெடிப்பதிலும் மற்றும் இனிப்பு உண்பதிலும் குழந்தைகளுக்கு இருக்கும் ஆர்வம் சொல்லி மாளாது.

தீபாவளி தினம் அன்று, நம் முகமே மிக்க ஒளி பொருந்தியதாக ஆகி விடும். மேலும், பெரியவர்களும், சிறு குழந்தைகளைப் போல் மிக்க சந்தோஷமாக, பட்டாசு வெடித்து இனிப்புண்டு, ஒவ்வொரு கணமும் ஆனந்தமாயிருப்போம். புதுமணத் தம்பதிகளின் தலை தீபாவளி கொண்டாட்டம் பற்றிச் சொல்லவே தேவை இல்லை. அவர்களுக்கு அத்தினம் ஒவ்வொரு நிமிடமும் மகிழ்ச்சியோ மகிழ்ச்சி தான். தாங்கள் சொர்க்க லோகத்தில் இருப்பது போல் உணர்வர்!

## தீபாவளியின் வரலாறு

நம் சனாதன நூல்களின்படி, தற்போதைய நேபாளத்துக்கு அருகே உள்ள இடத்தின் ராஜாவாக இருந்தவன் தான் நரகாசுரன். அவன் தன்னுடைய கொடுஞ்செயலினால், அனைத்து லோகங்களுக்கும் மிகுந்த அச்சுறுத்தலாக இருந்தான்.

நரகாசுரன், வராக ஸ்வாமி மற்றும் பூதேவியின் மகனாகக் கருதப்படுகிறான். கடும் தவம் இயற்றிய நரகாசுரன், பரம பிதாவான பிரம்மனிடமிருந்து ஒரு வரத்தைப் பெறுகிறான். அதாவது, அவனது தாயாரின் கையால் தான் அவனுக்கு மரணம் நிகழ வேண்டும் என்பது அந்த வரம்! நரகாசுரனின் கடுமையான தவத்தினை மெச்சிய பிரம்ம தேவனும், அந்த வரத்தினை அவனுக்கு அளித்தார். அதன் பிறகு, அவனின் அட்டகாசம் அதிகரித்து கொண்டே செல்கிறது.

அவன் பல்வேறு இடத்திலுள்ள அழகு மங்கைகளைக் கடத்தி வந்து தன் அந்தப்புரத்தில் சிறை வைத்தவன். நரகாசுரனின் கொடுமை அதிகரித்துக் கொண்டே போனதையடுத்து, அனைத்து தேவர்களும் ஒன்று சேர்ந்து, பகவான் கிருஷ்ணனை சந்தித்து நரகாசுரனை அடக்கி, ஒடுக்கி, அவனிடமிருந்து தங்களுக்கும், மக்களுக்கும் விடுதலை பெற்றுத் தர வேண்டும் என வேண்டி முறையிட்டனர்.

நரகாசுரன் பெற்ற வரம் குறித்து அறிந்த கிருஷ்ணர், தனது ரதத்தின் சாரதியாக மனைவி சத்ய பாமாவை (இவள் பூமி தேவியின் அம்சம்) தன்னுடன் அழைத்துக் கொண்டு வந்து போர்க்களம் செல்கிறார். நரகாசுரனுக்கும் கிருஷ்ணனுக்கும் இடையே கடும் சண்டை தொடங்குகிறது.

சிறிது நேர போராட்டத்திற்கு பிறகு, ஸ்ரீகிருஷ்ண பகவான் மயக்கமுற, சத்யபாமா வில்லை எடுத்து, அம்பைத் தொடுத்து நரகாசுரனைக் குறி வைத்து தாக்குகிறார். முடிவில் நரகாசுரன் செத்து மடிகிறான். பின்னர் கிருஷ்ணர், நரகாசுரன் பிடியில் இருந்த பெண்களையும், அவர்களின் விருப்பத்தின்படி திருமணம் செய்து கொள்கிறார் மற்றும் அவன் தேவர்களிடமிருந்து கைப்பற்றிய அனைத்து பொருட்களையும் மீட்டு தேவர்களிடம் ஒப்படைக்கிறார்.

நரகாசுரனை அதிகாலையில் வதம் செய்து முடித்த கிருஷ்ண பகவான், அன்றைய தினம், எண்ணை தேய்த்துத் தலை முழுகினார். அதுவே இன்றளவும், தீபாவளியன்று, அதிகாலையில் எண்ணைத் தேய்த்து குளிக்கும் வழக்கமாகத் தொடர்ந்து வருகிறது. அவன் தான் இறக்கும் தினத்தை மக்கள் குதூகலமாகக் கொண்டாட வேண்டும் என்று கேட்ட வரத்திற்கிணங்க, தீபாவளிப் பண்டிகை மிகுந்த மகிழ்ச்சியுடன் மக்களால் கொண்டாடப்படுகின்றது.

### பண்டைய தீபாவளி

பண்டைய கால தீபாவளி இன்றைய காலத்தை விட மிக்க மகிழ்ச்சியுடன் மக்கள் கொண்டாடினர். அதற்கு மிக முக்கியக் காரணம், அன்றைய மக்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். நண்பர், உறவினர் மட்டுமல்லாது, தங்கள் அண்டை அயலாருடனோடும் நட்பு பாராட்டி, தீபாவளி பண்டிகையைச் சிறப்புடன் கொண்டாடி வந்தனர். அக்காலத்தில் ஊரார் வீட்டுப் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளாய் பாவித்து வந்ததனால், அத்தீபாவளி தித்திக்கும் தீபாவளியாகக் கொண்டாடப்பட்டது.

### இன்றைய தீபாவளி

இந்நவநாகரீக உலகில், தீபாவளிப் பண்டிகை சற்றே களை இழந்தே கொண்டாடப்படுகின்றது. இதற்கு முக்கியக் காரணம் மக்களிடையே நட்பு பாராட்டும் குணமும், சுற்றத்தாரோடும் உறவினரோடும் இணையும் சுணக்கம் குறைந்து விட்டது என்றே சொல்லலாம். நான் என்ற எண்ணம் நீங்கி நாம் என்ற எண்ணம் நமக்கு வர வேண்டும். எல்லோரும் ஒரு தாய் மக்கள் என்ற நிலை வர வேண்டும். அப்படி நடந்தால் தீபாவளிப் பண்டிகை ஒளி மிகுந்ததாக இருக்கும்.

நம்மில் பலர் இன்று அடுக்குமாடிக் கட்டடங்களில் குடியேறியுள்ளோம். தினம் தினம் நம் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கால்களில் சக்கரத்தைக் கட்டி கொண்டு பறக்கிறோம். போதும் என்கிற மனமில்லாமல் இன்னும் வேண்டும் வேண்டும் என்கிற மனமே நம்மில் பலருக்கும் இக்காலத்தில் உள்ளது. தற்போதைய நிலைமை மாறினால் மட்டுமே தீபாவளிப் பண்டிகை ஒரு தலைசிறந்த பண்டிகையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.



# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் - 88

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | 4 |
| | | | 5 | | | | | | | | |
| | | 6 | | | | | | | | 7 | |
| | | | 8 | | | | | | | | |
| | | | | | | | | | 9 | | |
| | | 10 | | 11 | | | | | | 12 | |
| | | | | | | | | | | | 13 |
| | | | | | | | | | | 14 | |
| | | | | | 15 | | | | | | |
| | | | 16 | | | | | | | 17 | |
| 18 | 19 | | | | | | 20 | | | | |

தொகுப்பு :
**திரு. டி. ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 44807**

புதிருக்கு விடை அறிய 25ம் பக்கம் பார்க்கவும்...

## இடமிருந்து வலம்

1. திருச்சானூர் திருத்தலத்தில் தவமிருந்தவர் ....(11)
3. மஹாலக்ஷ்மியைத் துதித்து மங்கையர் அனுசரிப்பது.....(5) விரதம்.
5. திருமலையைப் போலவே திருச் சானூரிலும் பசிப்பிணி போக்குவது .....(8) மையம்.
8. வாரம் ஒருமுறை தாயாருக்கு திருமஞ்சனம் நடைபெறுமிடம் .....(7)தோட்டம்
15. பத்மாவதி தாயார் தோன்றிய நட்சத்திரம்....(6)
19. திருச்சானூர் சாந்தி விமானத்தில் ....(6) தாயாரை தரிசிக்கலாம்
20. ஆண்டுக்கு 3 முறை தாயார் வலம் வருவது தங்கத் .....(5)

## வலமிருந்து இடம்

4. பிரம்மோத்ஸவ 6ம் நாளில் பெரிய பிராட்டியைச் சுமக்கின்ற பேறு பெற்ற பெரிய திருவடி......(7)
7. தாயாருக்கு மிகவும் பிடித்தமான மாத்திரை என்னும் தயிர் சாதம்.....(6)
9. ஸ்ரீபத்மாவதி தாயார் அவதரித்தது ....(7) புஷ்கரணி.
12. திருச்சானூரில் கடைபிடிக்கப்படும் ஆகமம்....(10)
13. ஸ்ரீநிவாச பத்மாவதி திருக் கல்யாணம் நடந்த தலம் .....(7)
14. பிரம்மோத்ஸவம் காணும் பிராட்டி.....(6) தாயார்.
17. மக்கள் செல்வத்தை மறுப்பின்றி அளிக்கின்ற தாயார்....(7)

## மேலிருந்து கீழ்

1. திருச்சானூர் அருகில் உள்ள புனித ஆறு.....(8)
2. திருச்சானூரில் தோன்றியதற்கு முன்பு தாயார் இருந்த நகர்.....(7)
4. உறையூர் திவ்யதேசத்தில் அருள் புரியும் தாயார்....(11)
6. பத்மாவதி தாயாருக்கு நடக்கின்ற சேவைகளில் முக்கிய மானது.....(4) அர்ச்சனை.
10. பிராட்டியைப் போற்றி இந்திரனால் பாடப்பட்டது.....(5) அஷ்டகம்.
11. பெரிய பிராட்டியான மூத்த நாச்சியார்.....(5)

## கீழிருந்து மேல்

12. பாற்கடலில் இருந்து தாயாருடன் தோன்றியது சுகந்த .....(4) மரம்.
16. பிரம்மோத்ஸவம் முடிந்த மறுநாள், தாயாருக்கு நடைபெறுவது பூமாரி பொழியும்.....(5) மஹோத்ஸவம்.
18. தாயாரின் திருக்கரங்களில் இருக்கும் மலர்......(3)
19. நாச்சியார் விரும்புகின்ற விருக்ஷம்....(6)

*அலசுவோம்...*
*அறிவோம்...*
*ஆதிகாவிய நாயகர்களை...*

# கண்ணனை நேசித்த ஸ்ரீருக்மிணிப் பிராட்டியார்



எம்பெருமானின் பூர்ணாவதாரங்களில் ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயாரும் இப்பூவுலகில் அவதரித்து எம்பெருமானின் அவதாரத்திற்குப் பூரணத்துவத்தை அளிக்கின்றாள். ஸ்ரீராமாவதாரத்தில் சீதாதேவியாக அவதரித்த ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயார் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் ருக்மிணியாக அவதரித்துப் பெருமை சேர்த்தாள்.

விதர்ப்ப தேசத்து அரசனாகிய பீஷ்மகன் என்பவரின் திருமகளாக அவதரித்த ஸ்ரீமஹாலக்ஷ்மி தாயார் ருக்மிணி என்ற திருப்பெயருடன் கண் கவரும் எழிலுடன் வளர்ந்து வந்து திருமண வயதை எட்டினாள்.

அப்பொழுது துவாரகையிலிருந்து ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் வீரதீர சாகசச் செயல்களைப் பலர் மூலம் அறிந்து கொண்டிருந்த ருக்மிணி அவரையே திருமணம் செய்து கொள்ள விரும்பினாள். ஆனால், அவளுடைய சகோதரன் ருக்மனோ, ஸ்ரீகிருஷ்ணரை சதாசர்வ காலமும் விரோதித்து வந்த சிசுபாலன் என்பவனுக்கு மணம் முடிக்க நினைத்தான். அதற்கான ஏற்பாடுகளையும் அவன் செய்யத் தொடங்கினான்.

வயோதிகரான தந்தை பீஷ்மகரால் இதனைத் தடுக்க முடியாது என்பதை உணர்ந்த ருக்மிணி தனது நகரத்தில் வசிக்கும் அந்தணர் ஒருவரை ஸ்ரீகிருஷ்ணரிடம் தூது அனுப்பினாள். “அன்பரே, கொடியவன் சிசுபாலனுக்கு என்னை மண முடிக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதையொட்டி எங்கள் குல தெய்வமாகிய அம்மனுக்குப் பூஜைகள் நடக்க உள்ளன. நான் எனது தோழிகளுடன் அம்மன் கோயிலுக்குச் செல்லும் வேளையில் நீங்கள் படையுடன் வந்து என்னைக் கவர்ந்து செல்ல வேண்டும். அப்படித் தாங்கள் என்னை அழைத்துச் செல்ல வரவில்லை என்றால் அதன் பிறகு நான் உயிர் தரித்திருக்க மாட்டேன்” என்ற தகவலையும் ஓர் ஓலையில் எழுதி அந்த அந்தணரிடம் கொடுத்து அனுப்பியிருந்தாள் ருக்மிணிப் பிராட்டி.

அந்தணர் கொடுத்த ஓலையைப் படித்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா உடனடியாகத் தமது தேரில் ஆரோகணித்து விதர்ப்ப தேசத்தின் தலைநகரமாகிய குண்டினபுரம் நோக்கிக் கிளம்பலானார். அண்ணன் பலராமரும் பெரும் படையுடன் அவரைப் பின் தொடர்ந்தார்.

ருக்மிணிப் பிராட்டியார் எதிர்ப்பார்த்த படியே ஸ்ரீகிருஷ்ணர் அவளுடைய குலதெய்வக் கோயிலுக்குச் சென்று, அவளைத் தன்னுடைய தேரில் ஏற்றிக் கொண்டு துவாரகை அழைத்து வந்து அவளைத் திருமணம் செய்து கொண்டார்.

– திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம், 9486139685

ஸ்ரீகிருஷ்ணர் பின்னர் சத்தியபாமா, ஜாம்பவதி உள்ளிட்ட பல பெண்களையும் திருமணம் செய்து கொண்டாலும் ருக்மிணியின் மீது மாளாத பிரியம் செலுத்தினார்.

பின்னொரு சமயம் ஸ்ரீகிருஷ்ணருடைய எடைக்குச் சமமாகத் தான் அணிந்திருந்த தங்க நகைகளைக் கொடுத்து அவரை மீட்க எண்ணிய சத்தியபாமா அம்முயற்சியில் தோல்வியுற்றாள். அச்சமயம் ஸ்ரீருக்மிணிப்பிராட்டி ஸ்ரீகிருஷ்ணரின் மீது மாறாத அன்பு கொண்டு ஒரேயொரு துளசி தளத்தைத் தராசுத் தட்டில் வைத்து அவரை மீட்டதுடன், சத்தியபாமாவின் செல்வச் செருக்கையும் போக்கினாள்.

கர்ம பூமியாக இம்மண்ணில் வந்து பிறந்த ஒவ்வொரு ஜீவாத்மாவும் எப்பொழுதும் எம்பெருமானிடம் விருப்பம் வைத்திருக்க வேண்டும் என்பதுடன், எப்பாடு பட்டேனும் அவருடைய திருவடிகளை அடைந்து விட வேண்டும் என்ற துடிப்புக் கொள்ள வேண்டும் என்பதே ஸ்ரீகிருஷ்ணர் ருக்மிணியின் திவ்ய சரித்திரம் நமக்கு மிகவும் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

*தொடர்ந்து அலசுவோம்...*

## சாம்பிராணி தூபத்தின் பலன்கள்




**தினமும் இரவில் வீட்டில் சாம்பிராணி புகை போட்டாலே செல்வம் வீடு தேடி வரும். இதனால் தீமைகள் விலகி தேவையானவை தேடி வரும் என்பது ஐதீகமாக இருந்து வருகிறது. வீட்டில் வெள்ளி, செவ்வாய் மற்றும் பண்டிகை நாட்களில் கலப்படமில்லாத சாம்பிராணி புகை போட்டு வாருங்கள். இது நாள் வரை உங்களை தொடர்ந்த துரதிர்ஷ்டம் விலகி விரய செலவுகள் கட்டுக்குள் வந்து வீட்டில் செல்வம் மேன்மேலும் பெருக வழிவகுக்கும். அந்தச் சாம்பிராணியை எதனுடன் கலந்து போட்டால் என்னென்ன நடக்கும் என்பதைப் பார்ப்போம். சாம்பிராணியில் தூபம் போட்டால் கண் திருஷ்டி, பொறாமை ஆகியவை நீங்கி முன்னேற்றம் கிடைக்கும்.**

சாம்பிராணியில் அகில் போட்டுத் தூபமிட குழந்தைபேறு உண்டாகும். மருதாணி விதைகளைப் போட்டுத் தூபமிட சூனிய கோளாறுகள் விலகும். தூதுவளையைப் போட்டுத் தூபமிட வீட்டில் தெய்வம் நிலைக்கும். சந்தனத்தைப் போட்டுத் தூபம் போட லக்ஷ்மி கடாக்ஷம் கிடைக்கும். அருகம்புல் பொடியைப் போட்டுத் தூபமிட சகல தோஷங்களும் நிவாரணம் ஆகும். வெட்டிவேரைப் போட்டுத் தூபமிட காரிய சித்தி உண்டாகும். வேப்பிலையைப் போட்டுத் தூபமிட சகல நோய்களில் இருந்தும் நிவாரணம் கிடைக்கும். வெண்கடுகைபப் போட்டுத் தூபமிட பகைமை விலகும். வெண்குங்கிலியப் பொடியைப் போட்டுத் தூபமிட துஷ்ட சக்திகள் விலகும். ஜவ்வாதி போட்டுத் தூபமிட திடீர் அதிர்ஷ்டம் உருவாகும். வேப்பம் பட்டையைப் போட்டுத் தூபமிட ஏவல் பில்லி சூன்யம் ஆகியவை விலகும். நாய்கடுகைப் போட்டுத் தூபமிட துரோகிகள் அகல ஆரம்பிப்பர். காய்ந்த துளசியைப் போட்டுத் தூபமிட்டால் காரியத் தடை மற்றும் திருமணத்தடை விலகும். கரிசலாங்கண்ணி பொடியைப் போட்டுத் தூபமிட மகான்களின் ஆசிகள் கிடைக்கும். நன்னாரி வேரின் பொடியைப் போட்டுத் தூபமிட ஐஸ்வர்யம் கிடைக்கும். மருதாணி இலை பொடியைப் போட்டுத் தூபமிடமஹாலக்ஷ்மி வாசம் நிலைக்கும்.





**- திரு.பொ.பாலாஜி கணேஷ்,**
**சிதம்பரம்**



*மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய*

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

சூதமகரிஷி சௌனகாதி முனிவர்களுக்குத் திருமலையின் வெவ்வேறு பெயர்களைக் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். முடிவாக, வேங்கடாத்ரி என்னும் பெயர் உண்டா வதற்கான காரணத்தை எளிய மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில் விவரித் தார். உலகத்தில் செல்வம் எவ்வளவு இருந்தாலும், அவை எல்லாம் நிலையானது அல்ல. வேங்கடாத்ரி மட்டுமே நிலையான செல்வத்தைக் கொடுக்கக் கூடியது என்று விளக்கிக் கூறினார். அதற்கு எடுத்துக்காட்டாக வேங்கடாத்ரி மலையில் தவசிகள் செய்யும் வேள்விகள் குறித்து விவரிக்கத் தொடங்கினார். இக்கதையைக் கேட்ட சௌனகாதி முனிவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும், தவசிகள் தொடங்கிய வேள்வியைக் குறித்து விவரங்களை அறியும் ஆவலோடு கேட்கத் தொடங்கினர்.

ஸ்ரீஹரி வேங்கடாசலத்தில் ஸ்ரீதேவியுடன் கிரிடாத்ரியின் இயற்கைச் சூழலை இரசித்த வண்ணம் சுற்றி வரும் அத்தருணத்தில் தவத் தம்பதியர்கள் சிலர் வெகு தூரத்திலிருந்து அந்த இடத்திற்கு வந்தார்கள். அந்த இடத்தில் உள்ள இயற்கைச் சூழலைக் கண்டு பரவசம் அடைந்தார்கள். எங்குப் பார்த்தாலும் வண்ண வண்ண பூக்கள், காண்பதற்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரும் செடி கொடிகள், வானத்தைத் தொடும் உயர்ந்த மரங்கள். அதுமட்டும் அல்லாமல் அங்கு வீசும் சந்தன வாசத்தில் தன் மனத்தைப் பறிகொடுத்து தன் நினைவிழந்தவர்கள் போல் ஆனார்கள்.

ஆஹா! இந்த மலை முழுவதும் அழகாக அல்லவா உள்ளது. இந்த இடத்தை விட்டு விட்டு வேறு இடத்திற்கு நாம் ஏன் செல்ல வேண்டும் என்று ஒருவருக்கொருவர் விவாதித்துக் கொண்டனர். முடிவில், அந்த இடத்திலேயே நிவாசத்தை ஏற்படுத்திக் கொள்வது என்று ஒருமனதாக நிச்சயித்துக் கொண்டார்கள். அதற்குத் தகுந்தார்போல் குடில்களையும் பர்ணசாலைகளையும் அமைத்துக் கொண்டனர். சில நாட்களுக்குப் பிறகு, நமக்கு அடைக்கலம் தந்த இந்தப் புண்ணிய பூமியில் உலக நன்மைக்காக ஒரு வேள்வி செய்தால் நன்றாக இருக்கும் அல்லவா? என எண்ணம் கொண்டு வேள்வி செய்வதற்குத் தீர்மானித்தார்கள். அதற்குத் தேவையான வேலைகளையும் செய்யத் தொடங்கினர்.

இவைகள் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார் ஸ்ரீஹரி. இலட்சுமி தேவி, இம்மலையை நாம் பல முறை சுற்றி வந்திருக்கிறோம். இங்குள்ள இயற்கை அழகைக் கண்டு மகிழ்ந்தும் இருக்கிறோம். ஆனால், மக்கள் நடமாட்டம் இல்லாத இந்த இடத்தில் தவசீலர்கள் யாரோ வேள்வி செய்வதற்கு முயல்வது

# தெப்போத்ஸவம்



புஷ்பங்களாலும், அலங்கார விளக்குகளாலும் ஜொலிக்கும் தெப்பத்தில் பவனி வரும் திருவேங்கடமுடையானின் பட்டத்துராணியான ஸ்ரீபத்மாவதி தாயாரை தரிசிக்கலாம். தாயார் வீதி புறப்பாடு கண்டருளி, பின்பு தெப்பத்தில் ஏளப் பண்ணி பக்தர்களுக்கு அருள்பாலிக்கச் செய்வர். வேத பண்டிதர்களின் வேத பாராயணமும், அன்னமாசார்யரின் கீர்த்தனைகளும், இறுதியாக மேள, தாளத்தோடு மங்கள வாத்யத்துடன் தெப்போத்ஸவம் நடைபெறுவது சம்ப்ரதாயமாக இருந்து வருகிறது. ஒவ்வொரு நாள் முடிவிலும், தீக்கண்களின் திருஷ்டி அனைத்தும் காற்றிலே கற்பூரம் போல கரைய, கற்பூர மங்கள ஹாரத்தி காட்டப்பட்டு தெப்போத்ஸவம் நிறைவுக்கு வருகிறது.

போல் தோன்றுகிறது. அங்கு என்ன நடக்கிறது என்பதை நாம் இந்த உருவத்தோடு செல்ல வேண்டாம். விஷ்ணு பக்தர்களைப் போன்று வேடம் தாங்கிச் செல்வோம் என்றார் ஸ்ரீஹரி.

நான் விஷ்ணு பக்தனைப் போன்று மாறுகிறேன். நீயும் விஷ்ணு பக்தையாக மாறி என்னைத் தொடர்ந்து வரவும். நாம் இருவரும் வேள்வி பூமியை எல்லாம் சுற்றி வருவோம். மற்றொரு முக்கியச் செய்தி வேள்வி முடிவில் அந்தணர்கள் அக்னி குண்டத்தில் அவிசைக் கொடுக்கும்போது நான் நிஜரூபனாகி "அவிர்" பாகத்தைப் பெற்றுக் கொள்வேன். நீ அந்தக் காட்சியைக் காண்பாயாக என்றார்.

ஹரி முன்னே செல்ல ஸ்ரீதேவி அவரைத் தொடர்ந்து நடந்தாள். அவர்கள் இருவரும் மகிழ்ச்சி யாகச் சுற்றித் திரிந்து கொண்டிருந்த வேளையில் வேள்விச் சாலையில் இருந்த தவசிகள் அவர்

# பஞ்சமி தீர்த்தம்















திருவேங்கடவன் தனது பட்டத்து ராணியான அலர்மேல் மங்கைத் தாயாருக்கு அவளுடைய திருஅவதார திருநாளான பஞ்சமி தீர்த்தம் அன்று ஒவ்வொரு ஆண்டும் சீர் கொடுத்து அனுப்புகிறார். மஞ்சள், குங்குமம், புடவை, ஆபரணங்கள், மலர்கள், நைவேத்திய வகைகள் என்று அனைத்தும் யானைகள் மீது, திருமலையிலிருந்து திருவீதி உலாவாக திருப்பதி வழியாக திருச்சானூருக்கு சென்றடையும்.

தாயாருக்கும், சக்ரத்தாழ்வாருக்கும் பல்வேறு சுகந்த திரவியங்களால் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பின்னர் சக்ரத்தாழ்வாரை பத்ம சரோவரத்தில் "சக்கரம் ஸ்நானம்" கண்டருளி ஆலயம் திரும்புவர். இந்த நிகழ்வே "பஞ்சமி தீர்த்தம்" என்று அழைப்பர். தாயார் அவதரித்த இந்த பத்மசரோவரத்தில் புஷ்கரணி ஸ்நானம் செய்வதால் நம் பாவங்கள் தொலைந்து, புண்ணியர்கள் ஆகலாம்.

களையே உற்றுப்பார்த்துக் கொண் டிருந்தனர். யார் இவர்கள்? இந்த யாக பூமியில் இவர்கள் சுற்றித் திரிவதற்குக் காரணம் என்ன? இங்குக் காணப்படும் இவ்வழகன் வசந்த மாதவனா! மனிதனா! ஜெயந்தனா! இந்திரனா! சந்திரனா! அல்லது ஈஸ்வரனா! ஆனால் இவர்கள் ஆள் நடமாட்டம் இல்லாத இந்த ஆரண் யத்திற்கு எதற்கு வந்தார்கள். இவர்கள் அந்தணர்களா! கழுத்தில் பூணூல் உள்ளது. பார்த்தால் க்ஷத்திரியர்கள் போல உள்ளார்கள்.

ஆடவன் கையில் திவ்வியாயுதம் உள்ளது. இவர்கள் கோலம் விஷ்ணு பக்தர்கள் போல் உள்ளது வியப்பை உண்டாக்குகிறது என்று தவசிகள் தமக் குள் நினைத்துக் கொண்டனர். இவை எதையும் அறியாதவர்களைப் போல் விஷ்ணு தம்பதியர் தவசிகள் கூட்டத்தில் தாமும் ஒருவராகக் கலந்து அவர்கள் மத்தியில் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டு மகிழ்ச்சியாகத் தாம்பூலம் தரிக்கத் தொடங்கினர். அத்தம்பதியர் வாயில் வைத்துக் கொண்டு சேவித்துக் கொண்டிருந்த கஸ்தூரி மணம் நிறைந்த தாம்பூல மணத்திற்குத் தவசிகள் கட்டுண்டு போனார்கள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு தன்னு ணர்வுப் பெற்று அந்தத் தம்பதியினரைப் பார்த்து “மஹாராஜா! உங்கள் பெயர் என்ன? உங்கள் ஊர் என்ன? உங்கள் தாய் தந்தையர் யார்? இந்த இடத்திற்கு ஏன் வந்தீர்கள்? நீங்கள் சுற்றித் திரிவதற்கான இடம் இது அல்லவே? இங்குத் தவசிகள் நாங்கள் வேள்வி செய்துக் கொண்டிருக் கிறோம். இருந்தாலும், நீங்கள் வந்ததும், நாங்கள் உங்களைப் பார்த்ததும் முன்பு செய்த புண்ணியமாகவே கருதுகிறோம்.

எனவே, நீங்கள் எங்களுடனேயே இருங்கள். ஆனால், ஒரு சிறிய வேண்டு கோள். எங்கள் வேள்வியை அழிப்பதற்கு எத்தனையோ தீய சக்திகள் வேலை

## வைணவக்குறுக்கெழுத்துப்புதிர் 88க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சு | 2 க | ப் | பி | ர | ம் | ம | ம | ஹ | ரி | ஷி | |
| 3 வ | ர | ல | க்ஷ் | மி | ம் | ன | க | வா | ட | ரு | 4 க |
| ர் | வீ | | 5 அ | ன் | ன | ப் | பி | ர | சா | த | ன |
| ண | ர | 6 கு | | | ம் | ன | த | யோ | தீ | 7 த | க |
| மு | பு | ங் | 8 வெ | ள் | ளி | க் | கி | ழ | மை | ஜா | வ |
| கி | ர | கு | ர | வ | ரோ | ச | ம | த் | 9 ப | ரி | ல் |
| ந | ம் | 10 ம | க | 11 ஆ | ர | த் | ரா | ச | ஞ் | 12 பா | லி |
| தி | ர | ஹா | யா | தி | ம் | ன | வ | ண | ய | ரா | 13 நா |
| | ம | ல | ப | ல | தி | வ | மா | த் | ப | 14 ஸ்ரீ | ச் |
| ரை | வ | க்ஷ | ஷ் | க்ஷ | 15 உ | த் | தி | ரா | ட | ம் | சி |
| ம | ல் | மி | 16 பு | மி | க்ஷ | ல | ன | தா | ந் | 17 ச | யா |
| 18 தா | 19 வி | மா | ன | ல | க்ஷ் | மி | 20 தி | ரு | த் | தே | ர் |

செய்கின்றன. நீங்கள் எங்களுக்கு இந்த வேள்வியை நல்லபடியாக செய்து முடிக்க உதவியாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். தவசிகளுக்கு எப்பொழுதும் அரணாக இருந்து காப்பவர் தானே அரசர்கள். எனவே, நாங்கள் உலக நன்மைப் பொருட்டு செய்யப்படுகின்ற இந்த வேள்வியை நீங்களே முன்னிருந்து நடத்தித் தர வேண்டும் எனப் பணிவுடன் வேண்டினர்.

தவசிகள் வேண்டியதைச் செவிமடுத்த விஷ்ணு தம்பதியர் அவர்களைப் பார்த்து புன்னகைத்து, தவச்சீலர்களே! என்னைப் பற்றி ஒரு சிறு விளக்கம் நான் அந்தணன் அல்லன். அரசனும் அல்லன். இன்னும் சொல்வது என்றால் வைணவனும் அல்லன். சாதி என்ற ஒன்று இல்லை. நீங்கள் கேட்டீர்கள் அல்லவா! தாய் தந்தையர் யார் என்று? எனக்குத் தாய் தந்தையரும் இல்லை. எல்லா இடத்திலும் வடிவத்திலும் இருப்பவன் நான். ஒரு பெயர் ஊர் என்று இல்லாத எனக்கு இருப்பதற்கென்று ஓர் ஆசிரமும் இல்லை என்று சொல்லிக் கொண்டிருக்க முனிவர்கள் மிகவும் குழப்பம் அடைந்தார்கள்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்,
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

# மங்கை– மணாளன் சேவையில் மலர்கள்

– திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி.



**புஷ்ப கைங்கர்யம் :**

இயற்கை அன்னையின் அற்புதமான படைப்பே மலர்கள். அம்மலர்களால் சூழப்பட்டதே திருவேங்கடம். *“சிந்து பூ மகிழும் திருவேங்கடம்”* என்ற நம்மாழ்வார் பாசுரத்திற்கிணங்க, இராமாநுஜரின் கட்டளையின்படி அனந்தாழ்வான் ஏரியை வெட்டி, மலர்த்தோட்டம் அமைத்து திருவேங்கடமுடையானுக்கு புஷ்பக் கைங்கர்யம் செய்தார். திருவேங்கடமுடையானும் தாயாருடன் அந்த நந்தவனத்திற்கு வருகை தந்து திருவிளையாடல் புரிந்ததும் அனைவரும் அறிந்ததே. திருமலையில் மலரும் மலர்கள் அனைத்தும் திருவேங்கடமுடையானின் சேவைக்கே என்ற எண்ணத்தில் திருமலையில் மகளிர் தம் தலையில் மலர் அணிவதைக் கூடத் தவிர்க்கின்றனர்.

**புஷ்ப யாகம் :**

யாகத்தால் ஆராதிக்கப்படக் கூடியவன் மஹா விஷ்ணு. யாகத்தினுடைய பயனை அருளி, யாகத்தை அனுபவித்து அதனால் கொடுக்க வேண்டிய பலன்களை கொடுக்கக் கூடியவன். ஸ்ரீமந்நாராயணன் இக்கலியுகத்தில் திருவேங்கடத்தில் திருவேங்கடமுடையானாக இந்த யாகத்தை ஏற்றுக்கொண்டு, அதில் நாம் செய்த தவறுகளை, குறைகளைப் போக்கி அனுக்ரஹம் பண்ணுகிறான்.

இயற்கையின் சீற்றத்தினாலும், நாம் செய்யும் பலவித அபசாரங்களினால் பூமா தேவி சீற்றம் கொள்கிறாள், வருந்துகிறாள். அவள் வருத்தத்தையும், சீற்றத்தையும் போக்க பிராயசித்தமாக பிரம்மோத்ஸவம் முடிந்த பின்னர் தாயாருக்கும் புஷ்ப யாகம் செய்யப்பட்டு வருகிறது. புஷ்பயாகம் என்றால் மலர்களால் யாகம் நடத்தப்படுவது. கூடை கூடையாக அனைத்து விதமான மலர்களை வேத மந்திரங்கள் ஒலிக்க ஸ்வாமிக்கு பாதாதி கேசம் வரை சேர்த்துத் துதிப்பர். *“தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது”* இந்த புஷ்ப யாகத்தைச் செய்தால் போய பிழையும் தீயினில் புகுதருவான் நின்றனவும் தூசாகும்.

இவ்வருடம் இரண்டு பிரம்மோத்ஸவங்கள் திருவேங்கடமுடையானுக்கு நடந்து முடிந்தன. ஒரு அற்புத நிகழ்வு என்னவெனில் திருவேங்கடமுடையானுக்கும் அவருடைய பட்டத்து ராணியான அலர்மேல் மங்கைத் தாயாருக்கும் ஒரே மாதத்தில் புஷ்பயாகம் நடைபெறுவதேயாகும். இந்த கண்கொள்ளாக் காட்சியைத் தரிசித்து நாம் செய்த பாபங்களைப் போக்கிக் கொள்வோம்.

## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

18-09-2023 முதல் 26-09-2023 வரை திருமலையப்ப ஸ்வாமிக்கு நடைபெற்ற வருடாந்திர பிரம்மோத்ஸவத்தை முன் னிட்டு 18-09-2023 அன்று மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு. ஒய்.எஸ். ஜகன்மோகன் ரெட்டி அவர்கள் ஆந்திர மாநில அரசு சார்பில் பட்டு வஸ்த்திரங்களை சமர்ப்பித்தார். முதல்வருக்கு தீர்த்தப்பிரசாதங்களை வழங்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள். தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், ஆ.மா. சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் பங்கு கொண்ட இந்நிகழ்ச்சியில் 2024 ஆம் ஆண்டிற்கான தி.தி.தே. நாட்காட்டி வெளியிடப்பட்டது.

















**18-09-2023 முதல் 26-09-2023 வரை திருவேங்கடமுடையானுக்கு புரட்டாசி திருவோணத்தை முன்னிட்டு வருடாந்திர பிரம்மோத்ஸவம் ஒன்பது நாட்கள் வெகு வைபவமாக நடைபெற்றது. அதுபோது காலை, இரவு இருவேளைகளிலும் திருமலையப்ப ஸ்வாமி பல்வேறு வாகனங்களில் தனித்தும், உபயநாச்சிமார்களுடனும் எழுந்தருளி திருமாட திருவீதி உலா வந்த திருக்காட்சிகள்**

















திருமலை பிரம்மோத்ஸவ வாகன சேவைகளில் பங்கு கொண்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. பூமண கருணாகர ரெட்டி அவர்கள். தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள், தி.தி.தே. இணைச்செயலாட்சித்தலைவர்கள், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள், ஆந்திர மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் தி.தி.தே. உயர்அதிகாரிகள்

















## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

27-09-2023 முதல் 29-09-2023 வரை திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு நடைபெற்ற பவித்ரோத்ஸவ திருக்காட்சிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்ட தி.தி.தே. இணைச்செயலாட்சித் தலைவர் திரு. வி. வீரப்ரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்













திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமிக்கு 25-09-2023 முதல் 27-09-2023 வரை பவித்ரோத்ஸவம் மிக வைபவமாக நடைபெற்றது. அதுபோது வேதபண்டிதர்கள் ஹோமங்கள் செய்ய, ஆகம சாஸ்திரப்படி நடந்த பவித்ரோத்ஸவ திருக்காட்சிகள்.







# திருச்சானூர் அடை நெஞ்சே!

– திரு. எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர்,
9962788065

திருமலையில் நித்ய வாசம் செய்யும் எம்பெருமான் நம் பாவங்களை அழித்து, நம்மைப் புனிதமாக்குகிறான். மோக்ஷம் அளித்து, பரமபதம் கூட்டிச் செல்கிறான். முழு முதற்கடவுளான வேங்கடவனுக்கு துணை நின்று பக்தர்களுக்கு நற்கதி கொடுப்பவள் "திரு" என்றழைக்கப்படும் மஹாலக்ஷ்மி. "திரு" என்னும் கௌரவப்பட்டம் பெற்று பகவான் "திருவேங்கடவன்" என்றழைக்கப்படுகிறான். திவ்ய தம்பதிகளை "திருவேங்கடவா" என்றழைக்கும்போதும், நாம சங்கீர்த்தனம் செய்யும் போதும் போய பிழையும் புகு தருவான் நின்றனவும் தீயினில் தூசாகும். திருமகள், மண்மகள், மலர்மகள் என்றெல்லாம் போற்றப்படும் தாயார் மஹாலக்ஷ்மி பகவானுடன் சேர்ந்து பிரியாதிருந்து, அடியார்களான நம் பிழைகளை மன்னித்து நமக்கு அடைக்கலம் கொடுத்து, பகவானிடம் சிபாரிசு செய்து பரிந்து பேசி, பகவானின் துயரறு சுடரடிகளில் சேர்த்து விடுகிறாள். நம்மை நல்வழியிலும் நடத்திச் செல்கிறாள்.

திருமாமகட்கினியன், குலமாமகட்கினியன், நிலமாமகட்கினியன் என்றெல்லாம் பகவான் போற்றப்படுகிறான் (பெரிய திருமொழி 9.10). ஸ்ரீயப்பதி, திருமால் என்ற திருநாமங்கள் "ஸ்ரீ" அல்லது "திரு" என்னும் சிறப்பு அடைமொழியோடு சேர்ந்திருப்பது திவ்ய தம்பதிகளின் பெருமையை மஹிமையை உணர்த்துகிறது.

திருமலையானின் வலமார்பில் மஹாலக்ஷ்மியும், இட மார்பில் பத்மாவதியும் உறைகின்றனர். பத்மாவதி தாயார் திருச்சானூர் என்னும் அலமேலுமங்காபுரத்திலிருந்து பக்தர்களுக்கு அருள் செய்கிறார். திருச்சானூரில் பத்மாவதி தாயாரை முதலில் சேவித்து விட்டு திருமலை சென்றால் திருமலை யாத்திரை பூர்த்தியடைவதாக ஐதீகம்.

கார்த்திகை மாதம் சுக்ல பக்ஷ பஞ்சமியில் திருச்சானூர் பத்மாவதி தாயாருக்கு பிரம்மோத்ஸவம். இந்த உத்ஸவத்தின் கடைசி நாள் திருவேங்கடவன் கூரை புடவை, ஆபரணங்கள், மலர் மாலைகளை யானை மேல் மேளதாளத்துடன் அனுப்பி வைக்கிறார். திருவேங்கடவன் அனுப்பும் ஆடை அணிகலன்களை அணிந்து கொண்டு பத்மாவதி தாயார் ஊர்வலம் வருவது கண் கொள்ளாக்காட்சி. இங்குள்ள பஞ்சமி தீர்த்தம் பிரசித்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. உலக நன்மைக்காக நான்முகன் திருச்சானூரில் இரண்டு தீபங்களை ஏற்றி வைத்ததாகவும், அத்தீபங்கள் இன்றும் பிரகாசிப்பதாகவும் ஐதீகம். **"பொங்கு நீர்ச் செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடம் அடை நெஞ்சமே"** (பெரிய திருமொழி 1.8.1) என்று திருமங்கை ஆழ்வார் பாடும்பொழுது "திரு" என்னும் பத்மாவதி தாயாரையும், அலர்மேல் மங்கை தாயாரையும் வணங்கி வழிபட்டு அவர்கள் அருள்



## சஹஸ்ர தீபலங்கார சேவை

**கார்த்திகை மாதத்தில் தீபம் ஏற்றுவது தொன்றுதொட்டு நாம் கடைபிடிக்கும் ஒரு நிகழ்வு. மாலை நேரத்தில் ஸ்வாமி, தாயார் முன்னர் அழகான மண், வெள்ளி, தாமிரம், வெண்கலம், பஞ்சலோகத்தினால் ஆன விளக்குகளில் பசுநெய், நல்லெண்ணெய், இலுப்பை எண்ணெய் போன்றவைகளால் தீபம் ஏற்றி வழிபடுவர். இவற்றில் மண்ணால் ஆன அகல் விளக்கினால் தீபம் ஏற்றுவது சாலச் சிறந்தது. ஆலயங்களில் கார்த்திகை மாதத்தில் விளக்கேற்றி வழிபடுவது பண்டைய காலத்திலிருந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் திருச்சானூரிலும் தினமும் மாலை வேளையில் விளக்குள் பல ஏற்றப்பட்டு, அந்த விளக்கு ஒளிகளுக்கிடையே தாயாரை ஊஞ்சலில் எழுந்தருளப் பண்ணுவர். அப்பொழுது முதலில் வேதங்கள் ஓதப்பட்டு, அன்னமய்யா கீர்த்தனைகள் பாடப்பட்டு, இறுதியில் மங்கள வாத்தியங்கள் முழங்கப்பட்டு, மங்கள ஆரத்தி எடுத்து சஹஸ்ர தீபலங்கார சேவை நடைபெறும்.**

பெற்று, திருவேங்கடவனை வந்தடை என்று பொருள் கொள்ளலாம்.

"திருச்சானூர் அடை நெஞ்சமே; பிறகு திருவேங் கடம் வந்தடை நெஞ்சமே" என்று திருவேங்கடவனே கூறுவதாகவும் நினைக்கலாம். அடியார்கள் திருவேங்கடவனை வெண்மையன், கரியவன், நீலமணி நிறத்தன் என்று போற்றி வணங்குகிறார்கள். இத் திருமலையை அடைந்து திவ்ய தம்பதிகளை வணங்கு என்று உபதேசம் செய்கிறார் திருமங்கை ஆழ்வார். *''வெள்ளியான், கரியான், மணிநிற வண்ணன் என்று எண்ணி நாள்தோறும், தெள்ளியார் வணங்கும் மலைத்திருவேங்கடம் அடை நெஞ்சமே''* (பெரிய திருமொழி 1.8.2).

மேலும், திருவேங்கடவன் நித்ய சூரிகளுக்குத் தலைவன். ஆகாயம், பூமி, தீ, நீர், காற்று ஐம்பூதங்க ளுக்குள் நின்று அவைகளையும் இயக்குபவன். மணம் கமழும் மலர்மேல் அமர்ந்த மடப்ப குணம் உடைய திருமகள் கேள்வன் எழுந்தருளியிருக்கும் அதாவது பத்மாவதி தாயாரோடு சேர்ந்து காட்சி தரும் பகவானைத் தியானம் செய்கிறார் திருமங்கை ஆழ்வார் (பெரிய திருமொழி 1.8.8),

*''அம்பரம் அனல் கால் நிலம் சலம்*
*ஆகி நின்ற அமரர் கோன்*
*வம்புலா மலர் மேல் மலி மட*
*மங்கை தன் கொழுநன் அவன்*
*கொம்பினன்ன இடை மடக்குற*
*மாதர் நீளி இதணம் தொறும்*
*செம்புனம்மவை காவல் கொள்*
*திருவேங்கடம் அடை நெஞ்சமே*

தாமரைப் பூவிலிருந்து தோன்றியவள் பத்மாவதி தாயார். கலியுக வரதனான முழு முதற் கடவுளான அர்ச்சா அவதார மூர்த்தியான வேங்கடவனை *''தாமரையாள் கேள்வன்''* என்கிறோம். கருணையே வடிவெடுத்த தாயார், அடியார்களின் குற்றங்களைப் பொறுத்து அருளுமாறும், மன்னித்தருளுமாறும் சிபாரிசு செய்கிறாள். அடியார்களை திருவேங்கடவனின் துயரறு சுடரடிகளில் சேர்க்கிறாள். புருஷகார தேவதை என்றழைக்கப்படுகிறாள்.

அன்றலர்ந்த தாமரை மேல் வீற்றிருப்பதால் அலர்மேல் மங்கை என்னும் திருநாமம் *"திருக்கமல பாதம் வந்து என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே"* என்று பத்மாவதி தாயாரை தன் மனத்தில் தியானம் செய்து வணங்குகிறார் திருப்பாணாழ்வார். திருவரங்கனையே நினைத்து அமலன் ஆதிபிரான் என்று பாசுரம் தொடங்குகிறார். உண்மை; ஆனால், *''விரையார் பொழில் வேங்கடவன்''* என்று திருவேங்கடவனையும் திருவோடு மஹாலக்ஷ்மியோடு பிரியாமல்

இருக்கும் வேங்கடவனையும் நினைத்து வணங்கும் அழகே அழகு. பத்மாவதி தாயாரின் திருக்கமல பாதத்திலிருந்து தன் திருக்கண்களை அகற்றமுடியா தவராய், அவ்வழகில் மூழ்கித் திளைக் கிறார். *"கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி, நீண்ட அப்பெரிய வாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே"* என்று நிறைந்த மனத்தோடு மனப்பூரிப்போடு பாடுகிறார்.

திருமங்கையாழ்வார் அரங்கனைப் பாடத் தொடங்குகிறார். தாய் கூறுவது போல் அமைந்த பாசுரம். பரகால நாயகி யாய்த் தன்னை பாவித்துக் கொண்டு, பெண்மை ஏற்றிப்பாடுகிற பாசுரம். *"வெருவா தாள் வாய்வெருகி வேங்கடமே! வேங்கடமே! என்கிறாளால்"* வேங்கடத்தை அழைப்பானேன்? பரம பதத்திலிருந்து திருவரங்கம் நோக்கிப் புறப்பட்ட எம்பெருமான், திருமலையில் இளைப்பாற எண்ணினான்.

அதுபோலவே திருப்பாணாழ்வாரும், அரங்களைப் பாட எண்ணி, திருவேங்கடவனை நினைத்தாரோ? திருக்கமல பாதம் நினைவில் வர, பத்மாவதி தாயாரை என்றும் எப்போதும் எவ்விடத்தும் விட்டுப் பிரியாத திருவேங்கடவனை நினைக்கிறார். திவ்ய தம்பதிகளைக் கண்டு மகிழ்கிறார். *"திருவுக்கும் திருவாகிய செல்வா! தெய்வத்துக்கரசே! செய்ய கண்ணா, உருவச் செஞ்சுடராழி வல்லானே! உலகுண்ட ஒருவா! திருமார்பா!"* என்று திருமகளான பத்மாவதி தாயாரை, அலர்மேல் மங்கைத் தாயாரை தன் இதயத்தில் வைத்துள்ளவன் என்று பகவானைப் புகழ்கிறார்.

திருவேங்கடமுடையான் பத்மாவதி தாயார் திவ்ய தம்பதிகள் முன் நின்று எப்படிப் பிரார்த்திக்க வேண்டும் என்று கற்றுக் கொடுக்கிறார் திருமங்கையாழ்வார் (பெரியதிருமொழி 1.9.1),

*"தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும்*
*நோயே பட்டொழிந்தேன் நுன்னைக் காண்பதோர் ஆசையினால்*
*வேயேய் பூம்பொழில் சூழ் விரையார் திருவேங்கடவா*
*நாயேன் வந்தடைந்தேன் நல்கி ஆள் என்னைக் கொண்டருளே"*

சிறு வயது முதல் என்னைப் பெற்று வளர்த்த தாயும் தந்தையுமே கதி என்றிருந்தேன். அழகான மனைவி வந்தவுடனே

## தங்கத்திருத்தேர்

**திருச்சானூரில் திருவேங்கடமுடையானின் பட்டத்துராணியான அலர்மேல் மங்கைத் தாயார் பிரம்மோத்ஸவத்தில் ஆறாம் நாள் மாலையில் நடைபெறும் தங்கத்திருத்தேர் மிகவும் சிறப்பு வாய்ந்தது. மாலை நேரத்தில் ஆதித்யனின் ஒளிக்கதிர்கள் தங்கத்திருத்தேரின் மீது பட்டு ஜொலிக்க, மாதர்கள் தங்கள் உள்ளத்தின் இதயராணியான வரங்களை அளிக்கும் வரலக்ஷ்மியான ஸ்ரீபத்மாவதி தாயாரின் திருத்தேரை நான்கு மாட வீதிகளில் வடம் பிடித்து இழுப்பது கண் கொள்ளாக் காட்சியாக அமையும்.**

**வரலக்ஷ்மி விரதம் அன்றும், ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் வஸந்தோத்ஸவம் அன்றும் தாயார் இந்த தங்கத்திருத்தேரில் பவனி வந்து பக்தர்களை அருள்பாலிக்கிறார். திருவீதிகளில் மங்கள வாத்தியங்களுடன், நடன கலைஞர்களின் நாட்டியத்துடன், பஜனைக் குழுவினரின் பஜனைகளுடன் ஸ்ரீபத்மாவதி தாயாரின் "ஜே ஜே" முழக்கத்துடன் தங்கத்திருத்தேர் நகர்ந்து வரும் அழகே அழகு.**



மனைவியே கதி என்றிருந்தேன். இருவரும் பிள்ளைகளை ஈன்றெடுத்தோம். பிள்ளைகளே கதி என்றிருந்தேன். இப்படியே பந்த பாசத்தால், பாசம் என்னும் கொடிய நோய் என்னைச் சூழ்ந்தது. பாசம் என்னும் வலையில் வீழ்ந்தேன்.

நாய் போன்ற ஈனப்பிறவியான நான், திருவேங்கடவனே – பத்மாவதி தாயாருடன் சேர்ந்து காட்சி தரும் பகவானே! உன் திருக்கமலப் பாதங்களில் சரணம் அடைகிறேன். திருமலையில் வாழும் திருவேங்கடவனே! என் மேல் கருணை கொள். என்னை உன் அடிமையாக ஏற்றுக் கொள் என்று பகவான் முன் சரணடைய வேண்டும்.

திருமங்கை ஆழ்வார் உபதேசம் செய்கிறார். குழப்பம் வேண்டாம். சந்தேகம் வேண்டாம். திருவேங்கட மலையில் வீற்றிருக்கும் திவ்ய தம்பதிகளை – வணங்கினால், பகவான் நம்மை ஆட்கொண்டு, நல்வழியில் அழைத்துச் சென்று உய்ய வழிகாட்டுவான் என்கிறார் (பெரிய திருமொழி 2.1.4) ***''பண்டு தொண்டு செய்தாரை, மண்மிசை மேவி ஆட்கொண்டு போய், விசும்பு ஏற வைக்கும் எந்தை''*** என்று பாடுகிறார்.

பிரம்மாவும், பரமசிவனும், இந்திரனும் ஒன்று கூடி ஒன்றுப்படத் துதிக்கும் திவ்ய தம்பதிகளை திருவேங்கடநாதன் – பத்மாவதியை வணங்கி நன்மை அடையுங்கள் என்கிறார் ஆழ்வார். ***''ஆடு தாமரையோனும் ஈசனும் அமரர் கோனும் நின்று ஏத்தும் வேங்கடத்து ஆடு கூத்தனுக்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே''*** என்று பாடுகிறார்.

கீழ்த் திருப்பதியிலிருந்து பன்னிரண்டு கி.மீ. தொலைவில் பத்மாவதி தாயாருடன், பகவான் திருவேங்கடவன் தேனிலவு கொண்டாடிய இடம் ஸ்ரீநிவாச மங்காபுரம் கல்யாண வேங்கடேசப் பெருமாள். இங்கும் சென்று திவ்ய தம்பதிகள் அனுக்ரஹம் பெறலாம்.

திருப்பதியிலிருந்து நான்கு கி.மீ. தூரத்தில் அலமேலு மங்காபுரம் தாயாருக்குத் தனிக்கோயில். பத்மசரோவர் தீர்த்தம். ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மீது மஹாலக்ஷ்மி தோன்றி பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்து வருகிறாள் என்பது நம்பிக்கை. இங்கும் தாயாரின் ஆசீர்வாதம் பெறலாம்.



## திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்

**தாயாருடைய திருவடிகளில் மந்திரத்தினால் சமர்ப்பிக்கப் பட்ட பாத்யம் எனப்படும் ஸ்ரீபாத தீர்த்தத்தை எடுத்துக் கொண்டு எவர் பக்தியினால் தாயாரைத் தியானம் செய்து தலையில் ப்ரோக்ஷணம் செய்து கொள்கின்றனரோ அவர்கள் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகின்றனர். மண்ணில் எத்தனை புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றனவோ, அவை எல்லாவற்றிலும் ஸ்நானம் செய்வதால் என்ன பயன் உண்டாகின்றதோ பகவானுடைய பாத்ய தீர்த்தத்தைத் தெளித்து, தரிப்பதனால் அத்தனை பயன்களையும் அடையலாம் என பிரம்மாண்ட புராணம் கூறுகின்றது.**

**ஒவ்வொரு வருடமும் வைசாகம் (வைகாசி) மாதம் பௌர்ணமி நாள் அன்று நிறைவடையும் உற்சவமாக மூன்று நாட்கள் நடைபெறும் வருடாந்திர உத்ஸவமே வஸந்த உத்ஸவம். அபிஷேகம், நைவேத்தியம் ஆஸ்தானம், திருவீதி உலா என்று நடைபெறும் இவ்வுத்ஸவத்தில் பங்கு கொள்ளும் பக்தர்களுக்கு நோய்கள் நீங்கி ஆரோக்கியம் சித்திக்கும்.**



78

108 திவ்ய தேசம்



# திருப்பாடகம்

- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.



### புராண வரலாறு :

மகாபாரதத்தில் கண்ணபிரான் எளிமையை விளக்கும் நிகழ்ச்சியே இத்தல வரலாறு. முதல் நாள் தூதுவனாக கண்ணன் எழுந்தருளியபோது, அவன் அமர்வதற்கு இடம் கொடுக்காமலும், அவன் அருளிய அறிவுரைகளைச் சிறிதும் கேட்காமலும் புறக்கணித்தான் துரியோதனன். அன்றைய இரவு நண்பர்களுடன் சூழ்ச்சி செய்து, அடுத்த நாளில், தானாகக் கண்ணனை அவைக்கு வருமாறு அழைக்கிறான். அனைத்தும் அறிந்த கண்ணன் துரியோதனனின் அவைக்கு எழுந்தருளவும், பொய்யாசனம் இட்டு, அதன் கீழே மறைவான சுரங்கம் அமைத்து, மல்லர்களை அங்கே நிறுத்திக் கண்ணனை அழிக்கச் சூழ்ச்சி செய்தான் துரியோதனன். இதனை அறிந்த ஸ்ரீகிருஷ்ணன் தன் திருவடிகளாலேயே தன்னை அழிக்க வந்த மல்லர்களை அழித்து, உலகம் அனைத்தும் காணத்தக்க வகையில், தன்னுடைய பெருவடிவத்தைக் (விசுவரூபம்) காட்டினார்.

*"வஞ்சனை என்று மணியாசனம் தன்னை*
*அஞ்சன வண்ணன் அறிந்தருளி - செஞ்சுடரைப்*
*பூண்டான் பொறி பிதிரப் பொன் முடிபோய் அண்டம் உரி*
*நீண்டான் விழித்தான் நெருப்பு"*

என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் புகழ்கிறார்.

இத்தகைய பாரத வரலாற்றை வைசம்பாயனர் என்ற ஆசாரியன் இடத்தில் பாண்டவர்களின் பேரனும், பரீக்ஷித்து என்ற அரசனின் மைந்தனும் ஆகிய ஜனமேஜயன் தொடர்ந்து கேட்கிறான். இவ்விடத்தை ஆசார்யன் வருணித்த போது, எம்பெருமானின் விசுவரூப வடிவைத் தான் காணவேண்டும் என்ற ஆசையில், இதனைக் காணும் வழியாக ஆயிரம் அசுவமேத வேள்விகளைச் செய்தால் காணலாம் என்றும், அதனைக் காஞ்சியில் ஒரு முறை செய்தாலே ஆயிரம் முறைகள் செய்ததற்கு ஒப்பாகும் என்றும் வைசம்பாயனர் கூறவே, ஜனமேஜயன் அரசியல் கடமைகளை ஒதுக்கி காஞ்சியை அடைந்து, முறையாக வேள்வியை நிகழ்த்தவே, அவ்விடத்தில் பாண்டவ தீர்த்தக் கரையில் தன் விசுவரூபத்தை ஜனமேஜயன் நேரில் காணுமாறு அருளினான். அரசனும் கண்ணனைத் தொழுது அர்ச்சையில் இதே வடிவில் எழுந்தருளி இருக்குமாறு வேண்டவும் அதற்கு இசைந்த எம்பெருமான் எழுந்தருளினான். மன்னனுக்கும் க்ஷேமகன் என்ற பெயரில், பிள்ளைப் பேறு கிடைத்தது. அதனால் பாண்டவதூதப் பெருமாளை வழிபட்டால் பிள்ளைப்பேறு உண்டாகும் என்றும் சொல்வர்.

### சிறப்புகள் :

பிள்ளை உலகாசாரியர் தாம் அருளிய ஸ்ரீவசன பூஷணத்தில் *"மஹாபாரதத்தால் தூது போனவன்*



## துவஜாரோஹணம்,
## துவஜாவரோஹணம்

**திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு கார்த்திகை மாத பிரம்மோத்ஸவத்தின் முதல் நாள் பிரம்மாதி தேவர்களுக்கு அழைப்பு விடுக்கும் விதமாக துவஜாரோ ஹணம் என்னும் கொடி ஏற்ற விழா நடைபெறும். அதே போன்று பிரம்மோத்ஸவ இறுதி நாளன்று கொடியிறக்கத்துடன் பிரம்மோத்ஸவம் இனிதே நிறைவுறும். இந்த நிகழ்வுகள் எல்லாம் பாஞ்சராத்ர ஆகம விதிகளின் படி வேதபண்டிதர் களாலும், அர்ச்சக குழுவினராலும் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றது.**



*ஏற்றம் சொல்லுகிறது''* என்கிறார். சிலப்பதிகாரம் சொல்கிறது : *''தொடர்ந்து ஆரணம் முழங்க பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நா என்னநாவே. நாராயணா என்னா நா என்ன நாவே''.*

ஆழ்வார்கள் பன்னிருவரில், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் என்ற நால்வராலும் மங்களாசாசனம் செய்யப் பெற்ற தனிச் சிறப்பும் இப்பதிக்கு உண்டு.

நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியிலும், *''நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்''* (திருவாய்மொழி) என்ற பாசுரப் பகுதிக்கு விளக்கம் அருளிய நம்பிள்ளை "இருந்தவாறும்" என்பதற்கு, "திருப்பாடகத்திலே இருந்த படியும்" என்று சொல்கிறார். பாடகம் என்பதை, பாடு+அகம் எனப் பிரித்து, பெருமை விளங்கு மாறு எழுந்தருளியிருக்கும் இடம் என்பர்.

*''கல்லுயர்ந்த நெடுமதிள் சூழ் கச்சி மேயகளிறு''* (திருநெடுந்தாண்டகம்) எனும் பாசுரத்தில், "கச்சிமேய களிறு" என்ற தொடருக்கு விளக்கம் அருளிய ஸ்ரீபெரிய வாச்சான் பிள்ளை "கச்சி மேய களிறு" என்றது திருப் பாடகத்து எம்பெருமானைக் குறிக்கிறது என்பர்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | பாண்டவ தூதர் (கிழக்கு நோக்கிய அமர்ந்த திருக்கோலம்) |
| தாயார் | : | ருக்மிணி, சத்யபாமா. |
| தீர்த்தம் | | மத்ஸ்ய தீர்த்தம். |
| விமானம் | : | வேத கோடி விமானம், பத்ர விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | ஜனமேஜயன், ஹாரித முனிவர், அர்ச்சுனன். |
| ஆகமம் | : | பாஞ்சராத்ரம். |
| மங்களாசாஸனம் | : | 1) பேயாழ்வார், 2) பூதத்தாழ்வார், 3) திருமழிசையாழ்வார், 4) திருமங்கை ஆழ்வார். |

**த்யானச்லோகம் :**

*ஸ்ரீமத் பாடக பத்தநே விஹரதேஸ்ரீ பார்த்த தூதோ ஹரி:*
*ருக்மிண்யாஸஹ மத்ஸ்ய தீர்த்த நிகடேபத்ரே விமாநே சுபே ।*
*ஆஸிநோ ஹரி திங்முகச்ச ஸுசிரம்ஸ்ரீஸத்ய பாமாக்யயா*
*நாயக்யா ஸஹமோததேச ஹரிதப்ரத்யக்ஷ பாவோந்வஹம்॥*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

**பாசுரம் :**

*''உற்று வணங்கித் தொழுமின் உலகு ஏழும்*
*முற்றும் விழுங்கும் முகில்வண்ணன் - பற்றிப்*
*பொருந்தாதான் மார்பு இடந்து, பூம்பாடகத்துள்*
*இருந்தானை ஏத்தும் என் நெஞ்சு''*

– பூதத்தாழ்வார்

“சேர்ந்த திருமால் கடல் குடந்தை வேங்கடம்
நேர்ந்த என் சிந்தை நிறை விசும்பு -வாய்ந்த
மறை பாடகம் அனந்தன் வண்துழாய்க்
கண்ணி
இறை பாடி யாய இவை”

– பேயாழ்வார்

“நின்றது எந்தை ஊரகத்து இருந்தது எந்தை
பாடகத்து
அன்று வெஃகணைக்கிடந்தது என்னிலாதமுன்
எலாம்
அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின்
மறந்திலேன்
நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என்
நெஞ்சுளே.”

– திருமழிசையாழ்வார்

“நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும்
நினைப்பு அரியன
ஒன்றலா உருவாய், அருவாய நின் மாயங்கள்
நின்று நின்று நினைகின்றேன் உன்னை
எங்ஙனம் நினைகிற்பன்? பாவியேற்கு
ஒன்று நன்கு உரையாய், உலகம் உண்ட ஒண்
சுடரே”

– நம்மாழ்வார்

“கல்லார் மதிள் சூழ் கச்சிநகருள் நச்சிப்
பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க இருந்த அம்மான்
இலங்கைக்கோன்
வல்லாள் ஆகம் வில்லால் முனிந்த எந்தை
விபீடணற்கு
நல்லானுடைய நாமம் சொல்லில் நமோ
நாராயணமே”

– திருமங்கையாழ்வார்



## ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவ திருவிழாவின் கொண்டாட்டம்

திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு கார்த்திகை மாத பிரம்மோத்ஸவத்தில் தாயார் பல்வேறு வாகன சேவையில் திருமாட வீதிகளில் எழுந்தருளும்போது வேதபண்டிதர்கள் வேதங்கள் ஓத, பிரபந்த பாராயணதாரர்கள் நாலாயிர திவ்ய பிரபந்தங்களைப் பாராயணம் செய்ய, நாத ஒலியுடன், மேளத்தாளத்தோடு திருவீதிஉலா வருவாள்.

யானைகள், குதிரைகள் முன்னேச் செல்ல, பல்வேறு கலைக்குழுவினர் நடனமாடியும், சங்கீர்த்தனைகள் பாடிக்கொண்டும், சிறப்பாக தம்மை இறை அலங் காரங்களில் அலங்கரித்து கொண்டும், பஜனைகள் செய்து கொண்டும் வருவர். இந்த கண் கொள்ளாக் காட்சிகளைக் காணும் போது நாம் இருப்பது இந்திர சபையோ என்கிற எண்ணம் தோன்றும்.




## ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு லக்ஷ குங்குமார்ச்சனை திருவிழா

தாயாருக்கு குங்குமார்ச்சனை என்பது சிறப்பான ஒரு சேவையாகும். ஸ்ரீபத்மாவதி தாயருக்கு நடைபெறும் வருடாந்திர சேவைகளில் "லக்ஷ குங்குமார்ச்சனை" சேவை ஒன்றாகும். தாயார் பிரம்மோத்ஸவத்திற்கு முன்னர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு "லக்ஷ குங்குமார்ச்சனை" நடைபெறும். இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றால் சௌபாக்கியம் பெறலாம் என்பது ஐதீகம்.

*"தவம் புரிந்த சேதனரைச் சந்திரன் ஆதித்தன்*
*சிவன் பிரமன் இந்திரனாச் செய்கை - உவந்து*
*திருப்பாடகம் மருவும் செங்கண் மால் தன் மார்பு*
*இருப்பான் தகவு உரையாலே"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

### நாமாக்கள்

741. *ஓம் அசல: நம:*

தீயவர்களால் அசைக்க இயலாதவன்.

*ஓம் வாகீச் வரீ நம:*

சேதன, அசேதனங்கள், புதிய பெயர்கள், செயல்கள் செய்ய ச்ருஷ்டிக்கு உரிமை உள்ளவள்.

742. *ஓம் சல: நம:*

பக்தர்களுக்காகத்தான் சபதங்களையும் மீறுபவன்.

*ஓம் புஷ்டி: நம:*

எல்லா சேதன அசேதனங்களையும் வளர்ப்பவள்.

743. *ஓம் அமாநீ நம:*

பக்தர்கள் முன்பு, தன் உயர்வை எண்ணாதவன்.

*ஓம் ஸர்வாதி: நம:*

மஹாப்ரளயத்தில் எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிக் கொள்பவள்.

744. *ஓம் மாநத: நம:*

அடியார்களை மதிப்பவன்.

*ஓம் ஸர்வசோஷிணி: நம:*

ஸ்ருஷ்டியில் ஜீவாத்மாக்களின் கர்மவினைகள் தவிர மீதி அனைத்தையும் அழிப்பவள்.

745. *ஓம் மாந்ய: நம:*

கௌரவிக்கத்தக்கவன்.

*ஓம் சக்த்யாத்மிகா: நம:*

ஸர்வசக்தனனான பகவானுக்கு சக்திஸ்தானத்தில் இருப்பவள்.

746. *ஓம் லோக ஸ்வாமீ நம:*

அகில உலகங்கட்கும் ஸ்வாமியானவன்.

*ஓம் சப்தசக்தி: நம:*

எல்லா சப்தங்களாலும் அறியப்படுபவள்.

747. *ஓம் த்ரிலோகத்ருத்தம: நம:*

மூவுலகையும் தாங்குபவன்.

*ஓம் விசிஷ்டா நம:*

பசு, சுமங்கலிகள் முதலிய மங்கலங்கட்கு மங்கலத்தை அருள்பவள்.

748. *ஓம் ஸுமேதா:: நம:*

நல்ல எண்ணங்களை உடையவன்.

*ஓம் வாயுமதீ: நம:*

பகவானுடன் சேர்ந்தே இருப்பவள்.

749. *ஓம் மேதஜ: நம:*

யாக பலனாகத் தோன்றியவன்.

*ஓம் உமா: நம:*

பிறரை ஹிம்சிப்பவர்களைத் தடுப்பவள்.

750. *ஓம் தந்ய: நம:*

அவதரிப்பதைப் பெரும் பாக்கியமாக நினைப்பவன்.

*ஓம் ஆந்வீக்ஷி கீ: நம:*

ஊகித்து அறியும் தர்க்க சாஸ்த்ரத்தை அபிமானிப்பவள்.

*ஸ்ரீமதே ருக்மிணி ஸத்யபாமா நாயிகா ஸமேத*
*ஸ்ரீபாண்டவ தூத பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

பெரிய காஞ்சிபுரத்தில் கங்கைகொண்டான் மண்டபத்திற்கு அருகே இந்த திவ்ய தேசம் அமைந்து உள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்...*



## ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# திருவரங்கப் பெருமாள் அரையர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

(காதல் அரங்கேசர் இருகழல் பணிவோன்) அரையர் இறுதிக் காலத்திலும் திருவரங்கனைப் பற்றியே நினைத்திருப்பர். இவரைக் காணவந்த இராமாநுசர் "இப்போது மனத்தில் ஓடுகின்ற நினைவு என்ன?" என்று கேட்டார். உடனே அரையரும், "எம்பெருமானுக்கு எத்தனையோ திருநாமங்கள் இருந்தாலும் திருவரங்கம் என்ற நாலைந்து எழுத்துக்கள் சேர்ந்திருக்கிறபடி தான் என்னே என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். இதனால் அரையர் அரங்கேசரிடம் உள்ள காதலாகிற பக்தி கொண்டு அவன் இருகழல்களைப் பணிந்தது அறியற்பாலதாகும்.

(கானவர நயவிசையால் களிப்பிப்போன்) ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் மிகுந்த அறிவாளி. கானம் முதலான வித்யைகளிலும் எம்பெருமானிடம் அதிக பக்தியும் கொண்டவர். திருவரங்கத்தில் திருமொழி திருவாய்மொழித் திருநாளிலே அழகிய மணவாளப் பெருமாள் விபவ அவதாரத்தில் செய்த வியக்கத்தகு செயல்களை நாடகமாகத் திருக்கோலமடுக்குச் சாத்தி அபிநயித்து பெருமாளைக் களிப்படையச் செய்வர். பெருமாளும் மிகவும் உகந்து இவருக்கு "கோயிலுடைய பெருமாளரையர்" என்று திருநாமம் சாத்தி எல்லா வரிசைகளையும் வழங்குவர் என்று கூறுவர். அதனால் அரையர் நய இசையால் பெருமாளைக் களிப்பிக்கச் செய்தது காணலாம்.

ஒரு சமயம் திருவரங்கனைத் தொழுது, இராமாநுசர் அனுமதி பெற்று, அரையர் திருவேங்கட மலைக்கு எழுந்தருளினார். பெரிய திருமலை நம்பி, திருமலை அனந்தாழ்வான் புருஷகாரமாக மலையப்பனை சேவித்தார். பெருமாளும் வரிசைகள் எல்லாம் கொடுத்து, "வாரீர் அரையரே! நீர் நம் உடையவருக்குத் திருவாய் மொழி ஆசார்யராகையாலே நமக்கு மிகவும் உகந்த விஷயமாயிருக்கிறீர். ஆகையால் செந்தமிழில் முந்துற முன்னம் நம்மைக் கவி பாடுகையாலே நமக்கு இனிய விஷயமான முதலாழ்வார்கள் பாசுரங்களில் ஒரு கவி பாடும்" என்றான். அரையரும் முதல் மூன்று திருவந்தாதிகளில் முதல் பாசுரமும் முடிவு பாசுரங்களையும் **''மனத்துள்ளான் வேங்கடத்தான்''**, **''நெறியார் குழற்கற்றை''** என்னும் இரண்டு பாசுரங்களையும் தேவகானத்தில் பாடத் திருவேங்கடவன் மிகவும் களிப்புற்று மறுபடியும் அரையருக்குத் தீர்த்த ப்ரஸாதங்களைக்கொடுத்தான். மேலும் அனந்தாழ்வான் அரையரைப் பார்த்து "தேவரீர் நாளை முதலாக அத்யயன உற்சவத்தில் ஆழ்வார்களின் திவ்ய ப்ரபந்தங்களைத் திருவேங்கடவன் திருச்செவி சாத்தியருளும்படி தேவகானத்தில் ஏறிட்டுப் பாட வேணும்" என்றார். அரையரும் இது வேங்கடவன் நியமனம் என்று கொண்டு, பாடி வேங்கடவனைக் களிப்பித்த வரலாறு திருமலை ஒழுகு என்னும் நூலில் காணத்தக்கது.

மற்றொரு தடவை அரையர் திருமலைக்கு வரும்போது, **''கங்குலும் பகலும்''** என்ற திருவாய்மொழி பதிகத்தைத் தேவகானத்தில் ஏறிட்டுப் பாட, திருமலையப்பன் உகந்து "வாரீர்

## புஷ்கரணி ஸ்நானம் செய்யும் பக்தர்கள் கவனத்தில் வைத்து கொள்ள வேண்டிய விஷயங்கள்

- திருடர்கள் உள்ளனர் ஜாக்கிரதை.
- பக்தர்கள் தம் குழந்தைகளோடு உடைமைகளையும் ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ள வேண்டும்.
- புஷ்கரிணியில் ஸ்நானத்தின் போது சோப்பு, சாம்புகளை பயன்படுத்துதல் கூடாது.
- புஷ்கரிணியில் துணியைத் துவைத்தல் கூடாது.
- புஷ்கரிணியில் நீச்சல் அடித்தல் கூடாது.
- புஷ்கரிணி மற்றும் சுற்றுப்புறத்தினை தூய்மையாக வைத்தல் வேண்டும்.
- ஈரமான ஆடையுடன் ஆலயத்திற்குள் நுழையாதீர்கள்.
- உலர்ந்த ஆடை அணிந்து மட்டுமே ஆலயத்திற்குள் நுழைதல் வேண்டும்.
- காணிக்கை மற்றும் முடிப்புகளை உண்டியில் மட்டுமே செலுத்துதல் வேண்டும்.



அரையரே, ஆழ்வார் நம் பக்கல் மோகித்து நாயிகா நிலையை அடைந்து நம்மை அநுபவித்த முறையை அநுகரித்துக் காட்டினீர். இது நமக்கு மிகவும் களிப்படையச் செய்தது. கலியன் நம்மை நாயிகா நிலையில் பாடிய ஒன்றைச் சொல்லீர்" என்று கேட்க, அரையரும் கலியன் மடலூர்ந்து பகவதநுபவம் பண்ணின சிறிய திருமடலைப் பரவசராய் ஈடுபட்டுப் பாடியதை வேங்கடவன் களிப்படைந்து அரையருக்கு வரிசைகளைக் கொடுத்தான் என்ற வரலாறும் திருமலை ஒழுகு நூலில் காணத் தக்கது.

திருவரங்கத்தில் பிரம்மோத்ஸவ தீர்த்தவாரி இரவு அன்று வடநாட்டிலிருந்து ஒரு பக்தர் அரங்கனைச் சேவிக்க வேண்டும் என்று வந்தபோது அரையர் "திருமாலை" என்னும் பிரபந்த பாசுரத்தைப் பாடி முடித்தார். பெருமாளை மதயானைகளை வழிக்குக் கொண்டு வருவது போல் நன்றாகப் போற்றி, தம் வசப்படுத்திக் கொண்டு பெருமாளிடம் "நாயன்தே. தேவரீருடைய திருவடிகளுக்கு மிகவும் நல்லவனாக இருக்கும் இவர் தேவரீரை சேவிக்க வேணும் என்று 700 காத தூரம் நடந்து வந்துள்ளான். அதற்குத் தகுதியாக இவருக்கு வெகுமதி அளிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். பெருமாளும் தம் நடை அழகைக் காட்டினார். இதனால் அரையர் இசையால் அரங்கனைக் களிப்புறச் செய்தபடி. இந்த ஐதீகம் *"நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் நினைப்பரியன"* (5–10–6) என்பதற்குச் சேர அமைந்தது காணலாம்.

திருவரங்கத்தில் ஒரு அத்யயன உற்சவத்தில் பெருமாள் முன்பு அரையருடைய பிள்ளையான தேவப்பெருமாள் அரையர் என்பவர் பெருமாளை நோக்கி "உன் தாமரைக் கண்களால் நோக்காய் நோக்காய்....." (9–2–1) என்று திரும்பத் திரும்ப இதையே சேவித்திருந்தாராம். மேலே பாடவில்லை. ஏதோ எம்பெருமானிடத்தில் எதிர் பார்ப்பவர் போல் அவ்வரையர் நோக்காய் என்று சேவிப்பதைக் கேட்ட, அரையர் "பிள்ளாய், எதற்கு நீ எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்படி பலமுறை நோக்காய் என்று அவனை வற்புறுத்துகிறாய். அவன் உனக்கு என்ன குறை வைத்தான்" என்று பலபடியாகக் கேட்டாராம். இதனால் அரையர் நய இசையால் அரங்கனை களிப்பிக்க வேண்டும் என்ற நோக்குடைவர்.

வாழித்திருநாம உரை தொடரும்....

## உத்பத்தி ஏகாதசி

மார்கழி மாத கிருஷ்ண பக்ஷத்தில் வரும் ஏகாதசியின் பெயர் உத்பத்தி ஏகாதசி என்பர்.

கிருத யுகத்தில் சந்திரவதி நகரத்தைத் தலை நகரமாகக் கொண்டு நதிஜங்கன் என்ற அசுரன் ஆண்டு வந்தான். அவனுக்கு முரன் என்றொரு மகன் தோன்றினான். புராணங்களில் நாம் காணும் ஏனைய அசுரர்களைப் போலவே முரனும் தன்னுடைய எல்லையற்ற பராக்கிரமத்தின் காரணமாக தேவர்களாலும் வெல்ல முடியாதவனாக இருந்தான். இந்திரலோகத்தைக் கைப்பற்றியதுடன் அங்கிருந்த தேவர்கள் அனைவரையும் அவன் விரட்டி விட்டான். தேவர்கள் மட்டுமின்றி தவம் செய்யும் முனிவர்களும் முரன் என்ற அந்த அசுரனால் பெரும் துன்பத்தை அனுபவித்து வந்தனர்.

தீயவர்களால் துன்புறுத்தப்படுபவர்களின் கடைசிப் புகலிடம் தெய்வத்தின் சன்னிதானம்தான் அல்லவா? முரனால் துன்பத்துக்கு ஆளான தேவர்களும் முனிவர்களும் தங்களைப் பாதுகாக்கும் படி சிவபெருமானிடம் சென்று வேண்டினர். அவரோ ஸ்ரீமந்நாராயணனிடம் அடைக்கலம் வேண்டிக் கூறினார். அவ்வாறே தேவர்களும், முனிவர்களும் ஸ்ரீமந்நாராயணனை சரணடைந்தனர். தேவர்களின் பிரார்த்தனையைச் செவிமடுத்த ஸ்ரீமந்நாராயணன் உடனடியாக முரனுடன் சண்டையிடக் கிளம்பினார். முரனுடன் நீண்ட காலம் சண்டையிட்ட ஸ்ரீமந்நாராயணன் களைப்புற்று, போர்க்களத்தி லிருந்து விலகிச் சென்று இமயமலையில் உள்ள பத்ரிகாசிரமம் அருகிலுள்ள குகைக்குச் சென்று நித்திரையில் ஆழ்ந்தார். திருமால் திருமேனியிலிருந்து அவருடைய சக்தி அனைத்தும் தன்னுள் கொண்ட அழகிய பெண் தோன்றினாள். முரன் திருமாலைத் தேடி குகைக்கே வந்தான்.

அவனை பார்த்த அந்த பெண்ணே அவ்வசுரனை ஸம்ஹாரம் செய்தாள். அசுரன் அழிந்ததை அறிந்த தேவர்கள், முனிவர்கள் பெருமகிழ்ச்சியுற்று பூமாரி பொழிந்தனர். திருமால் அப்பெண்ணிற்கு "ஏகாதசி" என்று பெயரிட்டு அழைத்தார். அவள் பிறந்த அந்த நாளுக்கு உத்பன்ன/உத்பத்தி ஏகாதசி எனப் பெயர் ஏற்பட்டது. அன்று உபவாசம் இருப்பவர்களின் பாபங்களை ஸ்ரீமந்நாராயணன் சாம்பலாக்கி விடுகிறார். இவ்விரதம் இருப்பவர்கள் அஸ்வமேத யாகம் செய்த பலனை பெறுவர்.

## வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதத்தில் வரும் வளர்பிறை ஏகாதசியும் எம்பெருமான் செய்தருளிய அசுர வதத்தினால் புனிதத்துவம் பெற்றதாகும்.

பிரம்மதேவனின் மனத்தில் தோன்றிய கர்வத்தினை அடக்கும் பொருட்டு எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தம்முடைய திருச்செவிகள் இரண்டிலுமிருந்து மது, கைடபர் ஆகிய அசுரர்கள் இருவரைப் படைத்தார்.

# ஏகாதசி

– காயார் கோமடம் சேஷாத்ரிதாஸன் ,
காஞ்சிபுரம்






ஆனால், அந்த அசுரர்களோ பிரம்மதேவனின் கர்வத்தை அடக்குவதற்கு பதிலாக அவரையே கொல்ல முயற்சித்தனர். இதனை அறிந்த எம்பெருமான் அவர்களிடம் பிரம்ம தேவனைக் கொல்ல வேண்டாம் என்று கூறியதுடன், அவ்வாறு கொல்லாமல் இருப்பதற்காக தாம் அவர்களுக்கு ஏதேனும் வரம் கொடுக்கத் தயார் என்றும் கூறினார்.

எம்பெருமானே தங்களிடம் சமாதானமாகப் பேசுவதால் கர்வத்தின் உச்சிக்கே சென்ற மது, கைடபர் இருவரும், "நாங்கள் வேண்டுமானால் உனக்கு வரம் அளிக்கிறோம்" என்று அகந்தையுடன் பதில் கூறினர்.

சாதுரியமாகச் செயல்பட்ட எம்பெருமான் "நீங்கள் இருவரும் என் கையினால் கொல்லப்பட வேண்டும்" என்று அவர்கள் வழியிலேயே சென்று அவர்களை மடக்கினார். வேறு வழியின்றி மது கைடபர்கள் தாங்கள் வைகுண்ட பதவியை அடைந்த மார்கழி மாதம் வளர்பிறை ஏகாதசி நன்னாளில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை வழிபடுபவர்கள் அனைவருக்கும் வைகுண்ட உலகத்தின் வாசலைத் திறந்து வைத்து முக்தியை அளிக்க வேண்டும் என்று எம்பெருமானிடம் வேண்டிக் கொண்டனர். எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனும் அதனை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

இதனையொட்டியே ஒவ்வொரு வருடமும் மார்கழி மாத வளர்பிறை ஏகாதசி நன்னாளில் விஷ்ணு தலங்கள் அனைத்திலும் சொர்க்கவாசல் திறப்பும், கருட சேவையும் நடந்தேறுகின்றன. அன்றைய தினம் திருக்கோயில்களிலுள்ள சொர்க்க வாசலின் வழியே நுழைந்து எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை மனமுருகி வேண்டிக் கொள்ளும் அனைவருக்கும் முக்தி உறுதி செய்யப் படுகிறது.

தொடரும்....

## ஸப்தகிரி செப்டம்பர் 2023 விடைகள்

1. புரட்டாசி, திருவோணம்.
2. திருமழிசையாழ்வார்.
3. அகநானூறு.
4. மாங்காட்டு மறையோன்.
5. வேதாந்த தேசிகர்.
6. திருப்பாணாழ்வார்.
7. ஆதிவராகப்பெருமாள்.
8. வகுள மாதா.
9. பூதத்தாழ்வார்.
10. திருமங்கையாழ்வார்.
11. குலசேகராழ்வார்.
12. ஸ்ரீகிருஷ்ணர்.
13. அலிபிரி பாதாள மண்டபம்.
14. ஸ்ரீவெங்கமாம்பா அன்னதானக்கூடம்.
15. ஸ்ரீவைகானஸம்.

## வினாடி வினா

## போட்டி எண். 14

**சரியாக பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி அதிதி ராகவன், மீனா எஸ்டேட், கோவை மாவட்டம்.
2. செல்வி அ.விஜய் பாலா, திசையான் விளை, நெல்லை மாவட்டம்.
3. செல்வன் பா.எ.லோகேஸ்வரன், நசரத்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம்.

1) ஸ்ரீதேவி அளவில்லாத கீர்த்தி வாய்ந்தவள். குன்றின் மேல் வைத்த விளக்கைப் போன்று எல்லா இடங்களிலிருந்தும், எல்லா பக்தர்களாலும் சேவிக்கப்படுபவள். அவள் என்றும் தர்மத்தை நிலை நிறுத்தி, சோகங்களைத் துடைப்பவள்.

2) சர்வ லோகமும் சரணடையும் அளவற்ற செல்வம் உடைய மஹாலக்ஷ்மியாக அவளைச் சரணடைகிறேன். அவள்தான் அனைத்து மங்கள வஸ்துக்களுக்கும் அடிப்படையானவள்.

5) மங்கள மூர்த்தியும், சரணாகத ரக்ஷகியுமான உன்னை சரணடைகிறேன். இந்த சுலோகம் வேதாந்த வித்யையை அடைவதற்காகவும், வாழ்வில் மேன்மை பெறுவதற்காகவும் சேவிக்கப்படுகிறது.

8) உன் நாமங்கள் எமக்கு வேதங்களால் அளிக்கப்பட்ட பரிசுகள். இந்நாமங்களைப் பக்தி சிரத்தையோடு ஜபிப்பவர், பிறப்பு, இறப்பு எனும் பெரும் சூழலில் அகப்பட்டு துயரடையார்.

10) ஒத்த கருத்துடையவளாகவும், கஷ்டங்களை நீக்குபவளாகவும் இருக்கிறாய். அனைத்து அவதாரங்களிலும் அவருக்குச் சரியாக உருவெடுக்கிறாய். பாற்கடலில் கலந்துள்ள இனிப்புச் சுவைப் போல் பிரிக்க முடியாதவளாய் இருக்கின்றாய்.

11) பச்சை மாமணி ரத்தினம் போன்ற ஹரியுடன் சேர்ந்து உனது மெல்லிய மேனி தங்கம் போல் ஒளி வீசுகிறது.

13) பாற்கடலிலிருந்து நீ உதித்தபோது, உலகே காணாமல் போகும் அளவிற்கு மேகங்கள் மலர்களைப் பொழிந்தன. அஷ்டதிக் கஜங்களும் உனக்குப் புனிதமான ஸ்நானம் செய்வித்தன. வேத மந்திரங்களைக் கோஷித்தன.



எத்தனையோ ஆசாரியர்கள் இருந்தாலும் ஸ்வாமி தேசிகனைத்தான் "தேசிகர்" என்று சொல்கிறோம். அவருடைய இயற்பெயர் வேங்கடநாதன். ஹயக்ரீவர் அவர் நாவில் இருப்பிடம் கொண்டவர்.

ஒரு முறை இளைஞன் ஒருவன் தன் திருமணத்திற்காக பொருள் உதவி கோரினான். தேசிகர் ஸ்ரீஸ்துதியைப் போற்றிப் பாட, வானத்திலிருந்து பொற்காசுகள் மழையெனப் பொழிந்தன. அந்த இளைஞனை வேண்டும் அளவு பொற்காசுகளை எடுத்துக் கொள்ளச் சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டு அகன்று விட்டார்.

இந்த ஸ்ரீஸ்துதி 25 சுலோகங்கள் அடங்கியது. எல்லா மங்களங்களையும் அளிக்கக் கூடியது. ஸ்ரீஸ்துதியில் தாயாரின் ஸ்வரூபம், திருமேனி சௌந்தர்யம், கல்யாண குணங்கள், வைபவங்கள், தொன்மை, செல்வம் ஆகியவை சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இதில் அனைத்து சுலோகங்களுமே தேன் சுவையாக அன்னையைப் பற்றிக் கூறுபவை. நாம் இங்கு முக்கியமான சிலவற்றை அனுபவிப்போம்.



# ஸ்ரீஸ்துதியில் ஸ்ரீதேவி

- திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்,
8125616876.

15) உன்னுடைய அழகான, அமுதம் போன்ற தாமரைக் கண்கள் எப்பக்கம் எல்லாம் பார்க்கின்றனவோ, அங்கு அனைத்துச் செல்வங்களும் ஓடி வருகின்றன.

16) கர்ம யோகத்தைத் துவங்க செல்வம் தேவைப்படுபவர்கள் உன் மேல் பக்தி செலுத்துகின்றனர். அவர்களுக்கு அளவில்லா செல்வம் வெள்ளம் போல் பெருகுகின்றது.

17) உன்னுடைய தாமரைப் பாதங்களில் தங்கள் இதயத்தை வைத்திருப்பவர்கள் இந்த பூமியில் எல்லா செல்வங்களும் அவர்களுக்குக் கீழ்ப்படிய, சக்ரவர்த்திகளாகிறார்கள்.

18) ஒருவருடைய சஞ்சலமான மனதைக் கட்டுப் படுத்தி மோஷ சுகம் பெற "ஊரீகர்த்தும்" எனத் தொடங்கும் இந்தப் பாடல் ஜபிக்கப் படுகிறது.

22) போற்றத்தகுந்த தாயே! உன்னுடைய அருளினால் சம்சார சாகரம் எனும் பயம் சூரியனின் கதிர்களால் அழிவது போல அழியும்.

23) நீயும், ஸ்ரீஹரியும், என்னுடைய பெற்றோர். உம்முடைய அநுதாபத்திற்கு உரியவன் நான். தாயே! ஸ்ரீதேவி! நீ உன்னுடைய புன்னகை தவழும் முகத்தினால், "இது தவிர, உனக்கு வேறென்ன வேண்டும்" என்று நீ கேட்பது போல் உள்ளது.

24) ஸ்ரீதேவிதான் குறையாத மங்களங்களுக்கும் காருண்யத்திற்கும் அதிபதி. பகவானுடைய விலை மதிப்பில்லா செல்வம். அவளே விருப்பங்களை நிறைவேற்றும் காமதேனு. அவள் என்னுள் என்றும் இருப்பாளாக!

25) இதைப்படிப்பவர்கள், கலியுகத்தின் அனைத்து தீய சக்திகளும் மறைந்து அனைத்து மங்களங் களும் அருளப்பெற்று ராஜாதி ராஜனாக விளங்குவர்.

இச்சுலோகங்கள் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அருளைக் குறைவின்றி அனுதினமும் பெறச் செய்யும் அற்புத சுலோகங்களாகும். இதை அருளிய ஸ்ரீவேதாந்த தேசிகனின் திருவடிகளைப் பணிவோம்.

# பெரிய பிராட்டி



**மஹாலக்ஷ்மி தாயார் உலகம் முழுவதுக்கும் தாயார். அதனால் தான் அவள் "த்ரைலோக்கிய குடும்பினீ" என்று போற்றப்படுகின்றாள். "பகுகுடும்பி" என்று சிலரைச் சொல்வதுண்டு. அப்படியென்றால், அவருக்கு நிறைய பிள்ளைகள், பேரக்குழந்தைகள், உறவுக்காரர்கள் எனப் பலர் உள்ளனர். அதுபோல் பிராட்டியாரும் மிகப் பெரிய தாயார். உலகம் முழுக்க அவளுக்கு குழந்தைகள்தான் சாந்த சொரூபி!**

**"பத்மபிரியே பத்மினி பத்மஹஸ்தே" என்று சொல்கின்றோம். மலர்ந்து இருக்கின்ற தாமரையைப் போன்ற கண்களால் நம் அனைவரையும் கடாக்ஷித்துக் கொண்டிருப்பவள். "பத்மப்ரியா" தாமரைக்கு மிகவும் பிரியமாக இருப்பவள். "பத்மினி" என்றே லக்ஷ்மி மந்திரத்தில் பெயர் பெற்றவள். அவள் பத்மத்தையே இருப்பிடமாகக் கொண்டவள். பத்ம மாலையையே தரித்துக் கொண்டு இருப்பவள். அவளுடைய திருமுகத்தில் எப்போதும் புன்னகையே நிலைத்திருக்கும். கோபம் என்பதையே அவளுடைய திருமுகத்தில் காண முடியாது. பெருமாளுக்காவது எப்போதாவது கோபம் வரக் கூடும். ஆனால் கருணையே வடிவான மஹாலக்ஷ்மி பிராட்டிக்கோ கோபம் என்றால் என்னவென்றே தெரியாது.**

**திரு. அசோக்ராஜ்,**
**அரவக்குறிச்சிப்பட்டி, 9750333265.**



# நவம்பர் 2023
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

தொழில் துறையில் வளர்ச்சி உண்டு. குடும்ப உறுப்பினர்கள் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. கர்ப்பிணி பெண்கள் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். கணவன்–மனைவி பிரச்சனை ஏற்படும். உணவு, எண்ணெய் பொருட்கள் தொழில் லாபம் தரும். பூர்வீக சொத்துக் கள் பற்றி பேசுதல் வேண்டாம். முயற்சியின் காரணமாக முன்னேற்றம் காணும் மாதமிது.

**ரிஷபம்**

தொழிலில் அலைச்சல் அதற்கேற்ற வளர்ச்சி உண்டு. செலவிற்கேற்ற வருமானம் உண்டு. நேர்முகத் தேர்வில் வெற்றியும், வெளிநாட்டு வேலை வாய்ப்பும் கிட்டும். ஆரோக்ய குறைபாடு நீங்கும். மனைவியின் ஆலோ சனை நன்மை தரும். செலவிற்கு ஏற்ற வருமானம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். பொதுவாக அதிக நன்மைகளைத் தரும் மாதமிது.

**மிதுனம்**

தொழில் துறையில் போட்டி. அலைச்சல் இருந்தாலும் அதற்கேற்ற வருமானம் உண்டு. படித்தவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். குடும்ப உறுப்பினர்கள் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. திருமணம் கைகூடும். மனைவியால் தனவரவு உண்டு. கூட்டு வியாபாரம் விருத்தியாகும். மொத்தத்தில் இம்மாதம் யோகமானது.

**கடகம்**

தொழில் துறையில் வளர்ச்சி, இடமாற்றம் இருக்கலாம். மற்றவர்களுடன் பேசும்போது மிகுந்த கவனம் தேவை. தேவையற்ற விவாதத்தை தவிர்ப்பீர். எந்த காரியத்திலும் முதலில் தடையும், பின்னர் வெற்றியும் உண்டு. கணவன்–மனைவி இடையே சிறு பிரச்சனை ஏற்பட்டு சரியாகும். மாணவர்கள் கடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மொத்தத்தில் சிரமத்துடன் முன்னேறும் மாதமிது.

**சிம்மம்**

திருஷ்டி காரணமாக தொழிலில் சிறிது பின்னடைவு ஏற்படும். குடும்ப ஆரோக்யத்தில் அக்கறை தேவை. முதலில் பின்னடைவும் பின்னர் முன்னேற்றமும் உண்டாகும். 16ஆம் தேதிக்கு பிறகு புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும். திருமணம் கைகூடும். மருத்துவ உதவியால் குழந்தை பாக்கியம் கிட்டும். மாணவர்கள் நல்மதிப்பெண்கள் பெறுவர். மொத்தத்தில் சுபகாரியங்கள் நடக்கும் மாதம்.

**கன்னி**

ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தொழிலில் விருத்தி உண்டு. தொழில் போட்டிகளில், நேர்முகத் தேர்வில் வெற்றி கிட்டும். மனைவியின் ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. குடும்ப உறுப்பினர்களிடம் விவாதங்களை தவிர்க்கவும். மாணவர்களுக்கு முயற்சி திருவினையாக்கும். உணவில் அக்கறை தேவை. சகல காரியங்களிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

**துலாம்**

குடும்ப செலவினங்கள் அதிகமாகும். செலவிற்கு ஏற்ற வருமானம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. வெளியில் உண்பதை தவிர்க்கவும். கணவன்–மனைவி ஒற்றுமை உண்டு. பூர்வீக சொத்துக்கள் கிடைக்கும். புதிய வேலை வாய்ப்பால் இடமாற்றம் உண்டு. பேச்சினால் வெற்றி உண்டு. மாணவர்களுக்கு ஏற்றம் தரும். சகல துறைகளிலும் முயற்சியுடன் முன்னேறும் மாதமிது.

**விருச்சிகம்**

கடன் வாங்குவதையும், கொடுப்பதையும் தவிர்க்க வும். தொழில் துறையில் அலைச்சல், செலவி னங்கள் அதிகரிக்கும். வருமானம் குறையும். உணவில் எச்சரிக்கை தேவை. ஆரோக்ய செலவினங்கள் அதிகமாகும். மிகவும் கஷ்டப்பட்டு காரியங்கள் சாதிப்பீர். மனைவியால் நிம்மதி, தனலாபம் உண்டு. மிகவும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டிய மாதமிது.

**தனசு**

தொழில் துறையில் புது முயற்சிகள் வெற்றி தரும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். இளைய சகோதரன் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மருத்துவ உதவியால் குழந்தை பாக்கியம் கிட்டும். பழைய பாக்கிகள் ஓரளவு வசூலாகும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டு. வெளிநாட்டு வேலை வாய்ப்பு உண்டு. மொத்தத்தில் யோகமான மாதமிது.

**மகரம்**

தொழில் துறையில் கடும் முயற்சி செய்தால் வெற்றி உண்டு. ஆரோக்யத்தில் அக்கறை தேவை. வேலை வாய்ப்புகள் கிட்டும். மாணவர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. பேச்சில் மிகுந்த எச்சரிக்கை தேவை. விவாதங்களை தவிர்ப்பீர். நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுச் சரியாகும். மொத்தத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மாதமிது.

**கும்பம்**

ஆரோக்யத்தில் அக்கறை தேவை. வேலை பளு அதிகமாகும். தொழில் துறையில் புதிய முயற்சிகள் வெற்றி தரும். பேச்சில் விவாதத்தை தவிர்ப்பீர். உடன் பிறந்தோர் ஆதரவு கிட்டும். மாணவர்கள் ஊக்கத்து டன் படித்தால் மதிப்பெண்கள் பெறுவர். வரவிற்கேற்ற செலவு உண்டு. குடும்பத்தினருக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. கடும் முயற்சி செய்தால் வெற்றி கிட்டும் மாதம் இது.

**மீனம்**

தொழில் துறையில் லாபத்திற்கேற்ற செலவு உண்டு. வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. ஆரோக்ய குறைபாடுகள் நீங்கும். காரமான உணவினை தவிர்ப்பீர். தொழில் அலைச்சலால் தூக்கம் குறையும். இரவு நேரப் பயணங்கள் தவிர்ப்பீர். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தந்தை ஆலோசனை பேருதவியாக இருக்கும். பல வகைகளில் வெற்றி தரும் மாதம் இது.



# சந்தேகம் தெளிவோம்

**கே : திருமலையப்பனுக்கு மாவு அர்ப்பணம் செய்யும்போது சொல்ல வேண்டிய திருமந்திரம் எது?**

ப : வேங்கடேசாய நம என்று சொல்லலாம். இது திருமலையப்பனின் மந்திரம் ஆகும். இதனை "வேங்கடத்துறைவார்க்கு நம:" என்று தமிழில் அருளியுள்ளார் ஆழ்வார். கூடவே, வேறு மந்திரங்களும் சுலோகங்களும் பாடல்களும் நாமங்களும் சொல்லலாம்.

**கே: திருமலையப்பனுக்கு சனிக்கிழமை மாவு அர்ப்பணம் செய்து வழிபாடு செய்வது எதனால்? இதன் மூலம் என்ன பலன்?**

ப : திருமலைக் காடுகளில் வசித்துக் கொண்டிருந்த மலைவாழ் மக்களுக்கு இந்த பெருமான் தான் குல தெய்வம். அவர்கள் காட்டில் கிடைக்கும் தினை தானியத்தை மாவாக்கி தேனும் வெல்லமும் சேர்த்து சுவையாக்கி எம்பெருமானுக்கு படைப்பர். அது அவர்களது உணவாகும். அவர்கள் அர்ப்பணம் செய்யும் அந்த மாவை திருமலையப்பன் மிகவும் உகந்து ஏற்கிறான். அவர்கள் இருக்கும் மலையில் தான் வந்து தங்கியபடியால், தனது நாட்டு மக்கள் என்பதாலும், அவர்கள் மிகவும் பக்தியுடன் அளிப்பதாலும் அதனை ஏற்கிறான். இந்த விஷயத்தை புராணம் சொல்கிறது. "ப்ரியங்கு ப்ரியபக்ஷணாய நம:" என்பதாக அர்ச்சனையிலும் ஒரு திருநாமம் இதனைக் குறிக்கிறது. தினைமாவை விரும்பி உணவாக ஏற்பவன் என்று பொருள்.

மக்கள் பெருமையுடன் தரும் லட்டு முதலியவற்றை விட அடியவர்கள் பக்தியுடன் தரும் மாவு முதலியவற்றைத்தான் விரும்பு கிறான் என்பது அவன் பெருமை. இதனைப் போற்றவே, நாமும் மாவு படைத்து பக்தியுடன் அர்ப்பணம் செய்கிறோம். தினை மாவு கிடைக்காதவர்கள் அரிசி மாவு அர்ப்பணம் செய்யலாம்.

**கே : புரட்டாசி மாதத்தில் மஹாளய பக்ஷம் என்கிறார்களே அதற்கு என்ன பொருள்? என்ன விசேஷம்?**

ப : புரட்டாசி மாதத்தில் தேய்பிறை கிருஷ்ணபக்ஷத்தில் நம் பித்ருக்கள் கூடி நம் இருப்பிடம் வருவர். அதைத்தான் மஹாளயம் என்பர். பெருமை பெற்ற இடம் என்று பொருள். வேறொரு பொருளும் உண்டு. அந்தச் சமயத்தில் அப்போது அவர்களை பூசிப்பது விசேஷம். அதற்காக ச்ராத்தம் அல்லது பித்ரு தர்ப்பணம் முதலியவற்றைச் செய்வர்.

**கே : புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திர நாளின் பெருமை என்ன?**

ப : அன்று தான் திருமலையப்பனின் அவதார நாள் ஆகும். அதனைக் கொண்டாடவே அதற்கு முன் ஒன்பது நாட்கள் பிரம்மோத்ஸவம் நடத்துகிறோம். புரட்டாசித் திருவோண நன்னாளன்று தீர்த்தவாரி உத்ஸவம் நடைபெறும். மேலும், இந்த நாளின் பெருமையைப் புரிய வைக்கவே, திருவேங்கடமுடையான் புரட்டாசித் திருவோண நன்னாளில் ஒரு அவதாரம் எடுத்தான். அது ஸ்ரீவேதாந்த தேசிகனாக செய்த அவதாரம் ஆகும். திருமலையப்பனின் இந்தப் பெருமையை பல ஆசார்யர்கள் கொண்டாடி பாடித் துதித்துள்ளனர்.

**கே : ஸ்ரீதேசிகர் என்பதற்கு என்ன பொருள்?**

ப : ஸ்ரீதேசிகர் என்பதற்கு, வழிகாட்டும் ஆசார்யர் என்று பொருள். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் எல்லோருக்கும் வழிகாட்டி அருளிய ஆசார்யர் தேசிகன் ஆவர். இப்படியாக அவரை அவதாரம் செய்ய வைத்து தேசிகராக ஆக்கியது திருமலையப்பனும், அரங்கநகர் அப்பனும் ஆவர். இதனை ஸ்ரீதேசிகனே, தம் நூல்களில் குறித்து அருளியுள்ளார்.

**-நாவல்பாக்கம் ஸ்ரீஉ.வே. வாஸுதேவாசார்யார், திருவனந்தபுரம்**



## நீதிக்கதை

# உண்மையான பக்தி

ஒரு நாள் நாரத மகரிஷி கவலையுடன் காணப்பட்டார். அவரைக் கண்ட மஹாலக்ஷ்மி, மகனே! ஏன் கவலையாக இருக்கிறாய் என்று கேட்டாள்.

நாரதர்: தாயே நான் செய்யும் செயல்கள் யாவும் இறுதியில் நன்மை அளித்தாலும் அந்தக் கலகத்திற்கு நானே காரணம் என்று எண்ணிக் கவலையாக உள்ளது.

லஷ்மி: நாரதா! ரிஷிகேசம் சென்று புனித கங்கையில் நீராடி விட்டு வா. உன் கவலை போய்விடும்.

நாரதர் ரிஷிகேசம் வந்தார். கங்கையில் நீராட நினைக்கும்போது பல வண்ணங்கள் கொண்ட விசித்திரமான மீன் நீரில் காணப்பட்டது.

மீன்: நாரதா சௌக்கியமா?

நாரதர்: (ஆச்சரியத்துடன்) சௌக்கியம். நீ நலமா?

மீன்: (சலித்து கொண்டே) ஏதோ நலமாக இருக்கிறேன்.

நாரதர்: உன் சலிப்புக்கு காரணம் என்ன?

மீன்: என் நலத்தில் ஏதும் குறையில்லை. ஆனால் எனக்குக் குடிக்கத் தண்ணீர் தான் கிடைக்க மாட்டேங்கிறது.

நாரதர்: (கோபத்துடன்) என்ன மீனே நீருக்குள் நீந்திக்கொண்டே தாகத்துக்கு நீர் கிடைக்கவில்லை என்று முட்டாள்தனமாக என்னிடம் கூறுகிறாயா? என்ன என்னிடம் விளையாடுகிறாயா?

மீன்: (சிரித்துக் கொண்டே) நீர் மட்டும் என்னவாம்? பேரானந்தம் தரும் நாராயண மந்திரத்தை உம்முள் ஜபித்துக்கொண்டு ஏதோ நலம் என்று கூறுகிறீரே! இது மட்டும் நியாயமோ?

(மீன் வடிவில் இருந்த திருமால் நாரதர் முன் காட்சி அளித்தார்)

திருமால்: என் பெயரைக் கூறிச் செய்யும் செயல்கள் யாவும் நன்மையில் தானே முடிவடைகிறது. கலகம் என்பது அவர்கள் மனநிலையைப் பொறுத்து உள்ளது. அதை நீ நினைத்து வருந்தி என்ன பயன்? எல்லோரும் நலமாக இருக்க வேண்டி கலகத்தைத் துவக்குகிறாய். உன் நோக்கம் உயர்வாக இருக்கும் போது அதில் நடக்கும் செயல்களைக் கண்டு நீ ஏன் வருந்த வேண்டும்?



**நீதி:நாரதரும் உள்ளம் தெளிவடைந்து புனித கங்கையில் நிம்மதியாக ஆனந்தமாக நீராடினார். என்ன கவலையாக இருந்தாலும் சரி நாராயண மந்திரம் கூறினால் அதுவே பேரின்பம். யாவும் நலமாகவும் முடியும்.**

- திரு.எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி,
9750333265

# पाठ :अष्टविंशः ஸம்ஸ்க்ருதம் அறிவோம் பாடம்-28

| | | | |
|---|---|---|---|
| त्वाम् = உன்னை | वदितुम् = சொல்வதற்கு | पृच्छति | = கேட்டுக் கொண்டிருக்கிறான். |
| माम् = என்னை | उदित्वा = சொல்லி | प्रक्ष्यति | = கேட்பான், கேட்கக்கடவன். |
| युष्मान् = உங்களை | आह्वातुम् = அழைப்பதற்கு | पिबति | = குடித்துக்கொண்டிருக்கிறான். (பருகிக் கொண்டிருக்கிறான்) |

## வினாக்கள்

1. मम अग्रजम् आह्वातुं के अगच्छन्?
2. केऽपि न गच्छन्ति चेत् यूयमेव गच्छत।
3. अनन्तरम् अहमपि तत्र अगमिष्यामि।
4. ते इदानीं भोजनार्थम् आगच्छन्ति वा न वा : पृच्छ।
5. यूयमेव पृच्छत।
6. यूयं तूष्णीं भवत; ते एव आगमिष्यन्ति।
7. युष्मान् के भोजनार्थम् आहूतवन्तः?
8. तव अग्रजः आहूतवान् खलु।
9. मम अग्रजः ग्रामे एव नास्ति खलु कथम् आहूतवान्?
10. सः अद्य अगच्छत् इति मम अनुजः अस्माकं गृहे उक्तवान्।

1. என்னுடைய அண்ணன் உன்னை அழைக்கின்றார். விரைவாக வா.
2. இங்குச் சிறுவர்கள் இல்லை. நீயே சொல்லி வா.
3. அப்பா எங்கு (என்று) தம்பியைக் கேள்.
4. சிறுவர்கள் பால் முழுவதையும் குடித்தனர்.
5. இப்போது உங்களை யார் கேட்க முடியும்?
6. என்னை யார் கேட்டார்கள்?
7. அடே! விரைவாகப் பாலைக் குடி டா.
8. இவன் என்னை அழைப்பதற்கு வரவில்லை.
9. நீ சாப்பிடுவதற்கு எங்கள் வீட்டிற்கு வர முடியுமா?
10. நான் வர முடியாது (வர மாட்டேன்) ஆனால் என் தம்பியை அழை; அவன் வருவான்.

## விடைகள்

1. என் அண்ணனை அழைப்பதற்கு யார் போனார்கள்?
2. யார் போயிருந்தாலும் நீங்களே போங்கள்.
3. பிறகு நானும் அங்கு வருவேன்.
4. அவர்கள் இப்போது சாப்பாட்டிற்கு வருவார்களோ வர மாட்டார்களோ கேளுங்கள்.
5. நீங்களே கேளுங்கள்.
6. நீங்கள் வெறுமனே இருங்கள். அவர்களே வருவார்கள்.
7. உங்களை யார் சாப்பாட்டிற்கு அழைத்தார்கள்?
8. உங்கள் அண்ணன் அழைத்தார் அல்லவா!
9. உங்கள் அண்ணன் ஊரிலேயே இல்லையே; எப்படி அழைப்பான்?
10. அவன் இந்த வேளை வந்தானென்று எங்கள் தம்பி எங்கள் வீட்டில் சொன்னான்.


1. ममाग्रजः त्वामाह्वयति शीघ्रमागच्छ।
2. अत्र बालकाः न सन्ति।त्वमेव उदित्वा आगच्छ।
3. जनकः कत्रास्ति इति अनुजं पृच्छ।
4. बालकाः क्षीरं सर्वम् अपिबन्।
5. इदानीं युष्मान् कः प्रक्ष्यति?
6. मां के अपृच्छन्?
7. अरे शीघ्रं क्षीरं पिब रे।
8. एषः त्वाम् आह्वातु न आगच्छत्।
9. त्वम् अस्मद्गृहे भोजनार्थमागमिष्यसि वा?
10. अहं नागमिष्यामि किन्तु ममानुजमाह्वय, सः।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. சூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

# பல்சுவைப் பகுதி

## சித்திரப் பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



படத்தைப் பாருங்கள்



வண்ணம் தீட்டுங்கள்

### சித்திரம் ஏற்புடைய சொல்லை இணைக்க...

1. கஜ வாகனம்
2. திருத்தேர்
3. சிம்ம வாகனம்
4. முத்துப்பந்தல் வாகனம்
5. குதிரை வாகனம்
6. சேஷ வாகனம்
7. ஹம்ச வாகனம்
8. திருச்சி உத்ஸவம்

### எந்த தெய்வதிற்கு எந்த மலர் உகந்தது என்று பொருத்துங்கள்

சிவப்புத் தாமரை – மஹாலக்ஷ்மி
துளசி – திருவேங்கடவன்
வெள்ளைத் தாமரை – சரஸ்வதி

### வார்த்தைகளைச் சரியாக எழுதி ஆத்திசூடியைப் படிப்போமா!

இட்டு ஐயம் உண், ஒழுகு ஒப்புறவு, ஒழியேல் ஒதுவது

ஐயம் இட்டு உண், ஒப்புறவு ஒழுகு, ஓதுவது ஒழியேல்

### பாதையைக் கண்டுபிடி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 6 |
| | | ↑ | 0 | 4 | 2 | 8 |
| 4 | 2 | 0 | 6 | 5 | 6 | 9 |
| 3 | 4 | 5 | 8 | 4 | 7 | 8 |
| 8 | 2 | 9 | 7 | 3 | 12 | 9 |
| 7 | 1 | 5 | 13 | 12 | 11 | 10 |
| 11 | 8 | 12 | 14 | 17 | 12 | 14 |
| 18 | 16 | 17 | 15 | 16 | | |
| 19 | 10 | 18 | 16 | → | | |

திருமலையிலிருந்து திருச்சானூரில் கொலுவீற்றிருக்கும் அலர்மேல் மங்கை தாயாருக்கு யானை மீது சீர் கொண்டு வருவர். சீர் கொண்டு வரும் பாதையை வகுத்துக் காட்டிடுங்கள்.

### மாநிலத்தைக் கண்டுபிடி

மஹாராஜா அரண்மனை, மைசூர் தசரா, தலை காவேரி, ஜோக் நீர்வீழ்ச்சி போன்றவை இந்த மாநிலத்தில் உள்ளன.

மாநிலம் : ..............

கர்நாடகம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-16



**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் அவதரித்த திதி ........................
2. திருச்சானூரில் சுகர் தவம் புரிந்ததால் இவ்வூர் பெயர் ........................
3. திருச்சானூர் பிரம்மோத்ஸவத்தின் இறுதி நாள் திருக்குளத்தில் நடைபெறுவது ........................
4. மேல் பத்தூர் நாராயண பட்டாதிரியால் எழுதப்பட்ட நூல் ........................
5. மலையாள நாட்டில் உள்ள திவ்ய தேசங்களின் எண்ணிக்கை ........................
6. ருக்மிணி பிராட்டியின் தகப்பனார் பெயர் ........................
7. ருக்மன் ருக்மிணி பிராட்டியை யாருக்கு மணமுடிக்க எண்ணினான் ........................
8. சூதர் திருமலையின் சிறப்புகளை யாருக்கு எடுத்துக் கூறினார் ........................
9. திருமலையில் புஷ்ப கைங்கர்யம் செய்தவர் ........................
10. திருவுக்கும் திருவாகிய செல்வா! எனப் பாசுரமிட்டவர் ........................
11. தாமரையாள் கேள்வன் என்றழைக்கப்படுபவர் ........................
12. தீர்த்தத்தின் பெருமையைக் கூறும் புராணம் ........................
13. காஞ்சி பாண்டவ தூதர் திவ்ய தேசத்தில் வீற்றிருக்கும் தாயார் ........................
14. தெள்ளியார் வணங்கும் மலைத் திருவேங்கடம் எனப் பாசுரமிட்டவர் ........................
15. நரகாசுரன் நினைவாகக் கொண்டாடப்படும் விழா ........................

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.11.2023.



| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**

## சக்கரத்தை சுற்றுங்கள்!
## அதே வண்ணக்கட்டத்தில் எழுதுங்கள்!!






### விடைகள்

1) ஸ்ரீபத்மாவதி தாயார், 2) ஸ்ரீபத்மாவதி தாயார், 3) பஞ்சமி திதி, 4) உத்திராடம், 5) பத்ம சரோவரம், 6) பாஞ்சராத்ர ஆகமம், 7) கார்த்திகை மாதம், 8) ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலர்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



1) மாவிலைத்தோரணம், 2) வாழைமரக்குலை, 3) சுவற்றில் கோலம், 4) மலர் அடுக்கு, 5) கோலம், 6) தாம்பூலத்தில் வாழைப்பழம், 7) தாம்பூலத்தில் கொய்யாக்கனி.


# பத்ம வியூகம்

சித்திரக் கதை

கதை மூலம் :திரு. டி. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு
சித்திரம் :திரு. கே. துளசிபிரசாத்
தமிழாக்கம் :திருமதி வைஷ்ணவி சேஷகிரி

அர்ஜுனன்–சுபத்திரையின் மைந்தன் அபிமன்யு. ஸ்ரீகிருஷ்ணரிடம் வளர்ந்த அபிமன்யு சிறந்த வீரன். குருக்ஷேத்திரத்தில் யுத்தம் 13வது நாளை நெருங்கியது. துரோணர் பத்மவியூகத்தை வடிவமைத்தார். இளவரசர் துரியோதனனிடம் துரோணர்...




அபிமன்யு பத்மவியூகத்தில் தனியொருவனாக சிக்கிக்கொண்டான். ஆனால் தைரியமாகப் போர் புரிந்தான். எதிரிகளை வீழ்த்தினான்.
அப்பா! அபிமன்யு... அய்யோ கொன்று விடுகிறானே!
வீரர்கள்...
போர்க்களத்தில் வீரர்கள் அனைவரும், அவனைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள். கர்ணன் போன்ற பெரிய வீரர்கள் கூட அபிமன்யுவிடம் சண்டையிட முடியாமல் ஓடிப் போனார்கள். துரோணர் அபிமன்யுவின் வீரத்தை பார்த்து...
இந்த இரு சேனைகளிலும் அபிமன்யுவிற்கு இணையான வீரன் இல்லை.
துரோணரின் அனுமதியுடன் அனைவரும் அதர்ம யுத்தத்திற்கு இறங்கினர். இளவரசே!...
எல்லோரும் சேர்ந்து அபிமன்யுவை கொல்லுங்கள்! கொல்லுங்கள்!
துச்சாதனனுக்கு மிகவும் கோபம் வந்தது. அதனோடு புத்ர சோகமும் சேர்ந்தது.
அதிரதி, மஹாரதி அனைவரும் ஒன்று கூடி போர் புரியுங்கள்! அம்பு மழை பொழியுங்கள். தேரை நொறுக்குங்கள். தேரோட்டி... குதிரைகளை கொல்லுங்கள்!
உடலெல்லாம் காயங்கள்! ஆயுதங்கள் இல்லை. சோர்வுற்றான் அபிமன்யு. கதையுடன் வந்த துச்சாதனனின் குமாரனிடம் போர் புரிந்து மரணமடைந்தான். அதுவும் வீர மரணம்.
அம்மா! அம்மா!
சூரியன் மேற்கு திசையில் மறைந்தான். பாலவீரன் வீரமரணமடைந்தான்.
சாந்தி! சாந்தி!
முற்றும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)
ரசீது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
எண். : தேதி:
இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**
பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார்
புஷ்பயாக மஹோத்ஸவம்
19-11-2023

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-10-2023 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No. APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No. PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.

